# மே தின ஊர்வலம் மீது பொலிஸ் தடியடி;

'Riegster d as a News pape n Ceylon விலைசதம் 15 ★ ★

ஈழநாடு சந்தா
வரப்பதிப்பு மாத்திர
மூன்று மாதம் — ரூ. 4-00
ஆறு மாதம் — ரூ. 7-50
ஒரு வருடம் — ரூ. 14-00
முற்பணம் கட்ட வேண்டும்
தபால் அல்லது ஆள்மூலம் அனுப்பப்படும்.

ஈழநாடு

EELANADU

தபால்பெட்டி எண்: 49
போன்: 389

National Tamil Daily

மலர் 11
இதழ்: 80
தேசிய தினசரி

ஈழநாடு சந்தா
தினப் பதிப்பு
மூன்று மாதம் — ரூ. 18-00
ஆறு மாதம் — ரூ. 34-00
ஒரு வருடம் ரூ. 66-00

யாழ்ப்பாணம் சித்திரை 20 ஸபர் 14 வெள்ளிக்கிழமை (2-5-69)

# கண்ணீர்ப்புகை

## ஐவர் காயம்; (சீன) கம்யூனிஸ்ட் உள்ளூர்த் தலைவர்கள் கைது

### யாழ்நகரில் நேற்று நடந்த சம்பவம்

யாழ்ப்பாணம், வெள்ளி

**சீனசார்பு கம்யூனிஸ்ட் கட்சியினர் நேற்று மாலை யாழ்ப்பாணம் நகரில் நடாத்திய மேதின ஊர்வலத்தின்மீது பொலிசார் குண்டாந் தடிப் பிரயோகமும் கண்ணீர்ப்புகைப் பிரயோகமும் செய்த போது ஐவர் காயமடைந்தனர். இதனால் ஊர்வலம் கலைந்து சென்றது**

செங்கொடிகளுடனும் செஞ் சட்டைகளுடனும் சுலோகங்களுடனும் சுமார் 300 சீனசார்பு கம்யூனிஸ்ட் கட்சி ஆதரவாளர்கள் திரு. கே. ஏ. சுப்பிரமணியம் தலைமையில் இந்த ஊர்வலத்தில் சென்றார்கள்.

யாழ்ப்பாணம் கன்னாதிட்டிச் சந்திக்கருகாமையிலிருந்து நேற்று மாலை 5-15 மணிக்கு ஊர்வலம் ஆரம்பமானது இந்த ஊர்வலத்தை யாழ்ப்பாண நகரிலுள்ள சுமார் 5000க்கும் மேற்பட்ட மக்கள் வீதியோரங்களில் நின்று பார்த்தனர். கஸ்தூரியார் வீதி, மின்சாரநிலைய வீதி' பஸ்நிலையம் ஆஸ்பத்திரி வீதி, ஸ்ரான்லி வீதி, கே. கே. எஸ். வீதி வழியாக சுமார் ஒருமைல் தூரம் ஊர்வலம் வந்து பொலிஸ் நிலையத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கையில் யாழ்ப்பாணம் மக்கள் வங்கிக்கு முன்னால் வைத்து ஊர்வலத்தைப் பொலிசார் தடுத்தனர்.

பொலிசார் ஊர்வலத்தை தடுத்துநிறுத்த பஜாருக்குள் சுற்றியபோது ஊர்வலம் பொலிசாருக்கு டிமிக்கி கொடுத்து குறுக்குப் பாதைகளால் வந்ததைக் காணக் கூடியதாகவிருந்தது.

மாலை 5-40 மணிக்கு ஊர்வலத்தை தடுத்து நிறுத்த வென இன்ஸ்பெக்டர் சகாயம் சார்ஜன்ட் இராசையா தலைமையில் சுமார் 25 பொலிசார் இரண்டு ஜீப் வண்டிகளிலும் மோட்டார் சைக்கிளிலும் மக்கள் வங்கிக்கு முன்னால் வந்திறங்கினர்.

ஆனால் ஊர்வலத்துக்கு தலைமைதாங்கிய கே, ஏ. சுப்பிரமணியம் மேலும் முன்னேக்கிச் செல்ல இன்ஸ்பெக்டர் சகாயம் அவரிடம் சென்று ஊர்வலம் நடத்தாது கலைந்து செல்லுமாறு கேட்டார்.

திடீரென அங்கு பொலிசார் குண்டாந்தடிப்பிரயோகமும் கண்ணீர்ப்புகைப் பிரயோகமும் செய்ததால் ஊர்வலத்தினரில் ஒரு பகுதியினர் கலைந்து சென்றனர் முன்னணியில் நின்ற சுப்பிரமணியம் உட்பட ஐவர் குண்டாந்தடிப் பிரயோகத்தில் காயமடைந்தனர். இவர்களை பொலிசார் ஜீப்பில்ஏற்றிச் சென்றனர்.

கைது செய்யப்பட்ட ஐவரும் இரத்தம் தோய்ந்தநிலையில் காணப்பட்டனா.

செங்கொடிகள், சுலோக அட்டைகள், செருப்புகள் கற்கள் ஆகியவற்றையும் பொலிசார் எடுத்துச் சென்றனர்.

இதைத் தொடர்ந்து கடந்த இரவுவரை ஆயுதம் தாங்கிய பொலிசார் சம்பவம் நடந்த சந்தியில் காவல் புரிந்து கொண்டிருந்தனர்.

### வல்வெட்டித்துறையில் அதிகாலையில் நடந்த சம்பவம்

# கள்ளக் கடத்தல் லொறிக்கு இராணுவ 'ஜீப்' பாதுகாப்பு?

## இரு இராணுவசார்ஜன்டுகள்; தளபதியிடம் ஒப்படைப்பு

### லொறி தப்பிவிட்டது; 'ஜீப்' பிடிபட்டது

யாழ்ப்பாணம், வெள்ளி

கள்ளக் கடத்தல் பொருட்களுடன் சென்று கொண்டிருந்ததாகக் கருதப்படும் லொறி யொன்றிற்கு பாதுகாப்பளித்து, அதற்கு உதவி புரிந்தார்களென்ற சந்தேகத்தில் இரண்டு இராணுவ பொலிஸ் சார்ஜன்டுகளையும், ஒரு இராணுவ ஜீப் சாரதியையும் மற்றும் ஒருவரையும் இராணு[illegible] ஜீப்பில் வைத்தே வல்வெட்டித்து[illegible] பொலிஸார் கைது செய்தனர். இச் சம்பவம் நேற்று அதிகாலை இரண்டு மணியளவில் நடைபெற்றதாக வல்வெட்டித்துறைப் பொலிஸார் வடபகுதி [illegible] காரியாலயத்துக்கு அறிவித்துள்ளனர்.

## மலையேறும் கோஷ்டியில் 7 பேர் மரணம்

புதுடில்லி, மே 1

மேற்கு நேபாளத்தின் தவளகிரி மலைச்சிகரத்தை அடைகின்ற முயற்சியில் ஈடுபட்டிருந்த மலையேறும் கோஷ்டியைச் சேர்ந்த 5 அமெரிக்கர்களும், 2 வழிகாட்டிகளும் 16,00 அடி உயரத்திலிருந்து தவறி விழுந்து மாண்டனர். இதைத்தொடர்ந்து 27,000 அடி உயரமுடைய அம்மலைச் சிகரத்தை அடைகின்ற முயற்சி கைவிடப்பட்டுள்ளது.

மலையேறும் முயற்சியில் ஈடுபட்டிருந்த இக்கோஷ்டியின் ஏனைய உறுப்பினர்களும் காயமடைந்துள்ளனராம். இவர்களைத் தேடும் முயற்சியில் ஈடுபட்ட விமானம் குறிப்பிட்ட இடத்தை அடையமுடியாது திரும்பிவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. சீதோஷ்ண நிலைக் கோளாறே இதற்குக் காரணம் எனக் கூறப்பட்டது.

## மரணமான இளம் பெண்

## ஒருகுழந்தைதக்குத்தாயானவர்

# "மே முதல் திகதி மே தினம் கொண்டாடியது நாங்களே"

## மே தினக்கூட்டத்தில் (சீன) கம்யூனிஸ்ட் பிரமுகர்கள் பெருமிதம்

யாழ்ப்பாணம், வெள்ளி

"தேசிய அரசாங்கம் 1965-ம் ஆண்டு கொழும்பு நடத்தக்கூடாதென விதித்த தடையை மீறி நாம் ஊர்வலம் நடத்தினேம். இன்றும் லாயிரக்கணக்கான மக்கள் பார்த்துக்கொண்டிருக்கும் போது ஒருமைல் நீள ஊர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரணமான இளம் பெண்

## ஒருகுழந்தைக்குத்தாயானவர்

யாழ்ப்பாணம், வெள்ளி மலேரியாநோயினுல்மரணமாஞர் மணமாகாத 26 வயது இளம் பெண்ணெருவர். ஆனுல் அவர் 23 தினங்களுக்கு முன்னர் குழந்தை ஒன்றைப் பிரசவித்ததென்றவிஷயம் அவரது மரவிசாரணையின் போது தெரியவந்தது.

கந்தன் ராண்மணியென்ற இளம் பெண்ணின் மரணம் சம்பந்தமாக திரு. எஸ். கனகரத்தினம் மரணவிசாரணை நடத்திஞர்.

மரணமானவர் மணமாகாதவர் என்றும், அவரது சகோதரருடன் அக்கராயன் குளத்தில் வசித்து வந்ததாகவும்மலேரியாநோயினுல் கிளிநொச்சிஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு பின்னர் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மரணமானதாகவும் விசாரணையில் தெரிவி கப்பட்டது

மரணமானவர் அவரது சகோதரியின் கணவருடன் உறவு வைத்ததன் பயனுக மரணமாவதற்கு 23 தினங்களுக்கு முன்னர் குழந்தை ஒன்றைப்பெற்றெடுத்த விஷயம் மரணவிசாரணை அதிகாரியின் குறுக்கு விசாரணையின் போதுதெரியவந்தது.

மரணமானவருக்குப் பிறந்த குழந்தையை கவனமாகப் பராமரிக்கும் படியும் இதுவிஷமாக கணவனுடன் தகராறு ஏற்படுத்த வேண்டாமென்றும் மரணமானவரின் சகோதரிக்கு புத்திமதி கூறிய மரணவிசாரணைஅதிகாரி மலேரியாவினுல் மரணமாக நேர்ந்ததாகத் தெரிவித்து இயற்கைமரணம் என்றுதீர்ப்பளித்தார். (கா. நி)

---

பொலிஸார் கைது செய்தனர். இச் சம்பவம் நேற்று அதிகாலை இரண்டு மணியளவில் நடைபெற்றதாக வல்வெட்டித்துறைப் பொலிஸார் வடபகுதி பொலிஸ் தலைமைக் காரியாலயத்துக்கு அறிவித்துள்ளனர்.

இரு இராணுவ சார்ஜன்டுகளும், இராணுவ ஜீப் சாரதியும், இராணுவ ஜீப் வண்டியும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ள போதும் கள்ளக் கடத்தல் பொருட்களுடன் சென்றதாகத் தெரிவிக்கப்பட்ட லொறி இன்னமும் கைப்பற்றப்படவில்லை. இந்த லொறி பற்றிய விபரம் சகல பொலிஸ் நிலையங்களுக்கும் அறிவிக்கப்பட்டு உஷார் படுத்தப் பட்டுள்ளது.

வல்வெட்டித்துறை பொலிஸ் சப் இன்ஸ்பெக்டர் திரு. ஜெயசிங்கா தலைமையில் சென்ற பொலிஸ் கோஷ்டியினரே இவர்களைக் கைது செய்தார்கள். பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவல் ஒன்றைத் தொடர்ந்து இது நடைபெற்றது.

மாதனையிலிருந்து கள்ளக் கடத்தல் பொருட்களுடன் வந்த லொறியொன்றிற்கு, குறிப்பிட்ட இராணுவத்தினர் உதவி செய்து, பாதுகாப்பாக இராணுவ ஜீப்பில் லொறிக்கு முன்னுல் வந்ததாகவும், வல்வெட்டித்துறையில் வைத்து குறிப்பிட்ட இராணுவ ஜீப்பை பொலிஸார் தடுத்து நிறுத்த முயன்றபோது அது நிற்காமல் செல்லவே மூன்று தடவை பொலிஸார் இராணுவ 'ஜீப்' புக்கு துப்பாக்கியால் சுட்டே நிறுத்தியதாகவும் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். லொறியை நிறுத்த எடுத்த முயற்சி பயனளிக்கவில்லை.

### விசாரணை நடைபெறுகிறது

இது சம்பந்தமான பூரண விசாரணையை காங்கேசன்துறை உதவிப் பொலிஸ்சுப்பிரின்டன் திரு. சில்வாவும், பலாலி இராணுவ முகாம் கப்டன் திரு பிரான்சிஸும் நடாத்தி வருகின்றனர். இதுசம்பந்தமான அறிக்கையொன்றும் இராணுவ தலைமைக்காரியாலயத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட இராணுவ சார்ஜன்டுகளான சில்வாவும் ஹரிஸ் என்பவரும் பொலிஸ் விசாரணையின் பின்னர் இராணுவ அதிகாரியிடம் கையளிக்கப்பட்டனர். சம்பந்தப்பட்ட ஜீப்பும் இராணுவத்தாரிடம் கையளிக்கப்பட்டது.

லொறிக்கு முன்னுல் சென்றதென்ற சந்தேகத்தில் தேடப்பட்டு வந்தகாருடன் அதன் சாரதி நேற்று வல்வெட்டித்துறைப் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்தார். விசாரணையின் பின்னர் இருவரும் செலல அனுமதிக்கப்பட்டனர்.

ஜீப்பிலிருந்த மற்றெருவர் முன்னுள் உள்ளூராட்சி மன்ற உபதலைராக இருந்தவர் என பொலிசார் தெரிவித்தனர்.

குறிப்பிட்ட லொறியின் இலக்கம் பொலிஸ் விசாரணையில தெரியவந்ததைத் தொடர்ந்து லொறியைக் கைப்பற்றுமாறு நாட்டின் சகல பொலிஸ் நிலையங்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. (கா. நி)

---

## நேற்றைய ஊர்வலத்தில் சில சம்பவங்கள்

ஊர்வலம் எங்கோ எப்போது ஆரம்பமாகும்என்று எதுவுமே தெரியாதிருந்தது, தியேட்டர்களில 2-30 மணி மெட்னி ஷோ முடிந்ததும் 200 பேருக்கும் மேற்பட்டவர்கள் வெளியே வந்த போதே ஊர்வலம் திடீரென ஆரம்பமானது.

0 0 0

பொலிஸ் கன்ஸ்டபிள் ஒருவருக்கு தனது கெட்டித்தனத்தைக் காலால அடித்துக்காட்டிய வாலிபர் ஒருவரை 3 பொலிசார் துரததிச் சென்று மடக்கிப் பிடித்துத் தங்கள் கைவரிசையைக் காட்டினுர்கள் கடைசியாக சார்ஜண்ட் ஒருவரது முயற்சியால் தாக்குதல நிறுத்தப்பட்டது.

0 0 0

பொலிஸாரின் குண்டாந் தடிப்பிரயோகத்தால காயமடைந்த ஒருவர் நிறுத்தப்பட்டிருந்த இ. போ. ச பஸ் ஒன்றிற்குக்கீழே சென்று படுத்துவிட்டார். பொலிஸார் மிகுந்த சிரமப்பட்டு அவரை வெளியே இழுத்து பொலிஸ் 'ஜீப்'பில ஏற்றிஞர்கள்.

0 0 0

ஊர்வலத்தில சென்ற எவராவது நடந்துசெலலவிலலை அனைவரும் ஓடிக்கொண்டே சென்ருர்கள். இதனுல 20 நிமிடங்களுக்குள் சுமார் ஒரு மைல தூரம் ஊர்வலமாகச் சென்ருர்கள். (கா. நி.)

---

### ஐவர் ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம், வெள்ளி

நேற்று சட்டத்தைமீறி மேதின ஊர்வலத்தை நடத்திய போது பொலிசாரின் தடியடிப் பிரயோகத்தின் போது காயமுற்றதாகக் கூறப்படும் ஐவர் நேற்றிரவு 10 மணியளவில யாழ் ஆஸ்பத்திரியில அனுமதிக்கப்பட்டனர்.

17-ம் வார்ட்டில நேற்றிரவு அனுமதிக்கப்பட்ட ஐவரும் வருமாறு: திருவாளர்கள் கே. ஏ. சுப்பிரமணியம், கௌரிகாந்தன், நடராசா, ஜனுப்கள் இக்பால, கமுமது.

---

# "மே தினத்தை எவராலும் மாற்றி அமைக்க முடியாது"

## தமிழ்ப்பேசும் தொழிலாளர் மே தினக்கூட்டம்

யாழ்ப்பாணம், வெள்ளி

''மேதினம் தொழிலாளர் தினம். தொழிலாளர் உரிமைபெற்ற வரலாற்றுத் தினத்தை மாற்ற எவராலும் முடியாது. ஆட்சியாளர்களின் வசதிக்காக மேதினத்தை மாற்றி அமைப்பதை தொழிலாளர் ஒரு போதும் விட்டுக்கொடுக்கக் கூடாது''

தமிழ் பேசும் தொழிலாளர்களது சங்கங்களின் சார்பில் நேற்றிரவு பாஷையூரில் நடைபெற்ற மேதின விழாவில் திரு. மு. ஆலாலசுந்தரம் இவ்வாறு தெரிவித்தார்.

பாஷையூர் அழகையா முத்தமிழ் அரங்கில் நடைபெறவிருந்த இவ்விழா பொலிஸாரின் தலையீட்டால் தனிப்பட்ட காணியொன்றில் கடைசியில நடைபெற்றது.

கூட்டத்திற்குத் தலைமை வகித்த திரு என். அருணுசலம் பேசுகையில தொழிலாளரை மே முதலாம்திகதி மேதின விழாநடாத்தவேண்டாமென அரசாங்கம் விதித்த கட்டுப்பாடு ஜனநாயகத்துக்கு முரணுனது என்றும் பண்டாரநாயக்கா ஆட்சிக் காலத்தில ஒரு தடவை வெசாக்கும் மேதினமும் ஒன்ருக வந்தபோது இப்படி மேதினம் ஒத்திவைக்கப்படவிலலையென்றும் சுட்டிக் காட்டிஞர்.

திருவாளர்கள் வின்சன்ட், சேஞதிராசா, அல்பர்ட், முத்துலிங்கம், ஹென்றி, சிவசண்முகதாசன் ஆகியோர் உட்பட இன்னும் பலா பேசிஞர்கள். (கா. நி)

---

### 'சம்பாஷித்து சந்தோஷ மாக்குங்கள்'

லண்டன், மே. 1

''மாலையில் மனைவியருடன் சம்பாஷித்து அவர்களைச் சந்தோஷப் படுத்துங்கள்'' என்று லண்டன் நீதிபதி ஒருவர் கணவன்மாருக்கு புத்திமதி கூறிஞர்.

விவாகரத்து வழக்கொன்றின் போதே நீதிபதி இப்படிப் புத்திமதி கூறிஞர். விவாகரத்துக் கோரியபெண் தமது கணவர் மாலையில் நேரத்திற்கு வீடு திரும்புவதில்லையெனவும் வீட்டுக்கு வந்தாலும் அவரது வர்த்தகம் பற்றியே பேசுவாரொழிய வேறென்றுமே பேசுவதில்லையென்றும் தெரிவித்தார்.

---

சென்னை மோதல்

### இரு வழக்குகள் பதிவாகின

சென்னை, மே. 1

சென்னை மாநகரசபையில் அங்கத்தவர்களுக்கிடையில் நேற்று முன்தினம் மோதல் ஏற்பட்டது சம்பந்தமாக பொலிசார் இரண்டு வழக்குகளைப் பதிவுசெய்துள்ளனர்.

தமிழ்நாட்டில் ஏற்பட்டுள்ள வரட்சி நிலைமை குறித்து சபை விவாதித்துக் கொண்டிருந்தபொழுதே இந்தமோதல் ஏற்பட்டது.

காங்கிரஸ் அங்கத்தவர்களும், தி. மு. க. அங்கத்தவர்களும் தெரிவித்த புகார்களின்மீது இந்த வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

---

# பிரமுகர்கள் பெருமிதம்

யாழ்ப்பாணம், வெள்ளி

''தேசிய அரசாங்கம் 1965-ம் ஆண்டு கொழும்பு நகரைத்தவிர மற்ற இடங்களில் மேதின ஊர்வலம் நடத்தக்கூடாதென விதித்த தடையை மீறி நாம் ஊர்வலம் நடத்திஞேம். இன்றும் பொலிஸாரின் தடையைமீறி யாழ்ப்பாண நகரத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் பார்த்துக்கொண்டிருக்கும் போது ஒருமைல் நீள ஊர்வலம் நடத்திஞேம் அது மட்டுமல்ல பொலிஸாரின் தடையை மீறி இந்நாட்டில் நாங்கள் மட்டும்தான் மே முதலாம் தேதி மேதினவிழா கொண்டாடிஞேம்''

நல்லூர் வீரமாகாளியம்மன்கோவிலுக்கு அருகாமையில்உள்ள மைதானத்தில் நேற்று இரவு நடந்த சீனச்சார்பு கம்யூனிஸ்ட் கட்சியின் மேதினவிழாவில் திரு. செந்தில்வேல் பேசும்போது மேற்கண்டவாறு கூறிஞர்.

திரு, என். முத்தையா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டம் நேற்று மாலை 6 30 மணிக்கு ஆரம்பமானது கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, வீதியில் ஆயுதம் தாங்கிய பொலிஸார் காவல்புரிந்தனர்.

திரு. செந்தில்வேல் மேலும் கூறியதாவது: இலங்கையிலுள்ள மற்றக்கட்சிகள் மேதினத்தை ஏப்ரல் மாதம் கொண்டாடின. எந்தக்கட்சியும் ஊர்வலம் நடத்தவில்லை. நாங்கள் மட்டுமே ஊர்வலம் நடத்திஞேம்.

திரு. கே. டானியல் பேசும்போது கூறியதாவது: இந்த வருடம் மே தின விழாவை ஏப்ரல் மாதத்தில் கொண்டாடிஞர்கள். அடுத்த வருடம் மார்ச் மாதம் கொண்டாடுவார்கள். மூன்று நான்கு வருடங்கள் மேதினமும், வெசாக் தினமும் ஒரே தினத்தில் வருவதாக தெரிகிறது. இதனுல் எங்கள் போராட்டம் இன்னும் விரிவடையும்,

ராணுவம், பொலிஸார் எல்லாம் நமது ஊர்வலத்தை தடைசெய்ய நகரத்தில்முகாமிட்டிருந்தனர். ஆயுதந் தாங்கிய பொலிஸார் நகர வீதியில் ரோந்து சுற்றினர் இத்தனை எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல், நாம் ஒருமைலுக்கு மேலாக நகரில் ஊர்வலம் நடத்தி பொலிஸ் நிலையம் செல்லும் வீதிவழியாக சென்றுகொண்டிருந்தோம், சுமார் அரை மணிநேரத்தின்பின் பொலிஸார்வந்து தடியடிப்பிரயோகம்செய்தனர். நாங்கள் நினைத்ததைச் செய்தோம். வீரம் பேசிவிட்டு விட்டுக் கொடுக்கவில்லை. சவால் விட்டு பின் சரணுகதியாகவில்லை. கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் மே முதல் தேதியே மேதினத்தை கொண்டாடிஞேம்.

மற்றும் பலர் பேசிஞர்கள்.

---

# கம்பகா எம். பி. கைதாகி விடுதலை

## ஊர்வலத்தில் பொலிஸ் தடியடி

கொழும்பு, வியாழன்

கம்பகா எம். பி.யும் சீனச் சார்பு கம்யூனிஸ்ட் கட்சிப் பிரமிகருமான திரு. எஸ். டி. பண்டாரநாயகா இன்று காலை பொலிசாரால் கைது செய்யப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டார். திரு. எஸ். டி. பண்டரநாயகாவுடன் திரு. வார்ஸன் பெர்ஞன்டோ திரு. ஜினேந்திரபாலா ஆகியோரும் மற்றும் பெண்கள் பலரும் கைது செய்யப்பட்டனர். திரு. பண்டார நாயகாகோட்டை பொலிஸ் நிலையத்துக்கும் மற்றவர்கள் கொம்பனித் தெரு பொலிஸ் நிலையத்துக்கும் எடுத்துச் செல்லப்பட்டனர். அங்கு அவர்களை பொலிசார்விசாரணைசெய்து வாக்குமூலம் எடுத்தபின் விடுதலை செய்தனர்.

### பொலிசார் தடியடி

மேதினக் கூட்டத்துக்கு ஊர்வலமாகச் செல்வதற்கு நகரில் பல்வேறு இடங்களில் ஏற்பாடுசெய்யப்பட்டிருந்தது. ஓர் இடத்தில் இந்த ஊர்வலம் ஆரம்பமானதும், அவர்களைப் பொலிசார் தடுத்து நிறுத்தி சமய சம்பந்தமான ஊர்வலங்கள் மட்டும்தான் அனுமதிக்கப்பட்டுள்ளதென்றும் இந்த ஊர்வலம் நடைபெற அனுமதியில்லையென்றும், கலைந்து செல்லுமாறும் அவர்களைப் பொலிசார் கேட்டனர். இதை ஊர்வலத்தினர் ஏற்கவில்லை. தாங்கள் செல்வதற்கு வழி விடுமாறு கோரி தொடர்ந்து செல்ல முனைந்தனர். இச் சமயத்தில் அவர்கள் மீது தடியடிப்பிரயோகம் செய்ய பொலிசாருக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. பொலிசார் தடியடிப்பிரயோகம் செய்து ஊர்வலத்தைக் கலைத்தனர்.

### 50 பேர் காயம்

தடியடிப்பிரயோகத்தில் ஐம்பது பேர் காயமடைந்ததாக இலங்கைத் தொழிற்சங்கசம்மேளனம் தெரிவித்தது. தடியடிப்பிரயோகம் செய்யவில்லை. இலேசாக குறுந்தடிப்பிரயோகம் செய்ததில் சிலருக்கு இலேசான காயம்தான் ஏற்பட்டதென்றும் பொலிசார் தெரிவித்தனர்.

### காரியாலயத்தில் மேதினக் கூட்டம்

இலங்கைத் தொழிற்சங்க சம்மேளன அலுவலகத்தில் திரு. என். சண்முகதாசன் தலைமையில் மேதினக் கூட்டம் நடைபெற்றது. இரண்டு மூன்று பேராக பல்வேறிடங்களிலிருந்து வந்தவர்கள் தொழிற்சங்க சம்மேளன காரியாலயத்துக்குள் பிரவேசித்தபோது பொலிசார் கதவைச்சாத்தி அவர்கள் உட்புகாதவாறு தடுக்க முனைந்தனர். இச்சமயம் சம்மேளன அலுவலகத்துக்கு அவர்கள் வருவதைத் தடைசெய்வதற்குப் பொலிசாருக்கு உரிமையில்லையென்றும் திரு. சண்முகதாசன் சுட்டிக்காட்டிஞர். இதன்பின் பொலிசார் ஆலோசனை செய்துகொண்டு அங்கிருந்து சென்றனர். உள்ளே திரு. சண்முகதாசன் தமது மேதின சொற்பொழிவை நிகழ்த்திஞர்.

# மொத்தம் எண்மர் கைது

இலங்கைத் தொழிற்சங்க சம்மேளன யாழ்ப்பாணக் கிளையைச் சேர்ந்தவர்களும் இலங்கை கம்யூனிஸ்ட்கட்சி (சீனச்சார்பு) யாழ்ப்பாணக் கிளையைசேர்ந்தவர்களுமான திரு. வி. ஏ. கந்தசாமி, திரு. நீர்வை பொன்னையா, திரு. 'பூகன்ஸ்' வடிவுநாதன் ஆகியோர் இன்று காலை கட்சிக்காரியாலயத்தில் வைத்து பொலிசாரால் 'ஜீப்பி'ல் ஏற்றிச் செல்லப்பட்டனர்.

பொலிசாரால ஊர்வலத்தில கைது செய்யப்பட்ட கே. எ. சுப்பிரமணியம் மரிக்காயர், நடராசா கௌரிகாந்தன். இக்பால ஆகிய ஐவரும் பொலிஸ் பாதுகாப்பில வைக்கப்பட்டுள்ளனர்.

மொத்தம் எண்மரும் பொலிஸ் பாதுகாப்பிலிருக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### தேவை

நெசவு செய்வதில் அனுபவமுள்ள பெண்கள்தேவை. நேரில் தொடர்புகொள்ளவும். கருணு நெசவு நிலையம், ''கண்ணகிரி'', இடந்தரை ஒழுங்கை, காங்கேசன் துறை. 974

பேக்கர்

பாண், கேக்வகைகள் மற்றும் சுவீற்ஸ் தினிசுகள் தயாரிக்கக்கூடிய நல்ல அனுபவமுள்ளவர் நேரிலோ அல்லது கடிதமூலமோ அத்தாட்சிப் பத்திரங்களுடன் உடனே விண்ணப்பிக்கவும். கே. செல்வநாயகம், 2 A, கச்சேரி ஒழுங்கை, யாழ்ப்பாணம். 983

### விற்பனைக்கு

காணி:

.கொக்குவில் ஸ்டேசன் ரோட்டில் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு ச. சின்னத்துரை, றயில் ரோட், கொக்குவில். 975

தோட்டக்காணி:

ஆவரங்கால் சந்தியில் (வல்லை வீதிக்கும் அச்சுவேலி வீதிக்கும் இடையில்) 15 பரப்புத் தோட்டக் காணி விற்பனைக்குண்டு வீதிக்கரையில் வீடு கட்டவும் வாய்ப்பானது. விபரங்கட்கு சி. மயிலானந்தன், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். 1010

இந்தியன் கிளிகள்- ஒவ்வொன்றும் ரூபா 20/-அவுஸ்திரேலியா பிஞ்சு குருவிகள் சோடி ரூபா 40/- பால் வெள்ளை விசிறி புறுக்கள் சோடி ரூபா 20/- 14, நல்லூர் குறுக்குரோட், யாழ்ப்பாணம். 988

அரசாங்க கேள்விகள்

பொதுவேலைத் திணைக்களம்

என்.4564- பின்வரும் வேலைகளுக்கான கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன. (1) யாழ்ப்பாணம் பொதுவேலைப்பகுதி கிளை வேலைக்களத்தில் சிற்றுண்டிச்சாலை மலசலகூடம், நேரக்காப்பாளர் அலுவலகம், எண்ணைக்களஞ்சியம் அமைத்தல்: (2) நாவற்குழி மாவட்ட உணவுப்பொருள் களஞ்சியத்திற்கு மேலதிக வேலைகளும் திருத்தங்களும் செய்தல். கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். கடைசித்திகதி 1969-5-28.

மேலதிக விபரங்கட்கு அரசாங்க வர்த்தமானி (29-4-1969)யைப் பார்க்கவும். G P 2960

## கேள்விவிளம்பரம்

### அச்சுவேலி தெற்கு முளக்கன் சுடலை மடம்.கட்டுதல்

மேற்குறிப்பிட்ட வேலைக்கு சீல்வைத்த கேள்விப்பத்திரங்கள் அச்சுவேலி கிராம சபைத்தலைவரால் 10-5-69ந் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிவரையும் ஏற்றுக்கொள்ளப்படும்.

ஒவ்வொரு கேள்விக்கும் கேள்விப்பிணைப்பணம் ரூபா 25/-ம், பத்திரப்பணம் ரூபா 5/-ம் கட்டியதன் பேரில் 9-5-69ந் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12-00 மணிவரையுமே கேள்விப் பத்திரங்கள் வழங்கப்படும்.

ஏனைய விபரங்களைக்கிராம சபைக் கந்தோரில் அறிந்து கொள்ளலாம்.

சி.த. சபாரத்தினம் ஜே. பி.
தலைவர்,
சி. ச. அச்சுவேலி.
கிராமசபைக் கந்தோர்,
அச்சுவேலி,
28-4-69. 1409

## உற்சவம்

மூளாய் ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய பூங்காவன உற்சவமாகிய இன்று (2-5-69) இரவு 8-30 மணியளவில் பண்டிதை சைவப்புலவர் தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களால் ''பிரணவ ரூபன்'' என்னும் விஷயம் பற்றிய சொற்பொழிவைத் தொடர்ந்து வைத்தியக் கலாநிதி T. கங்காதரன் அவர்களால் புல்லாங்குழல் கச்சேரியும், வேறு நிகழ்ச்சிகளும் நடைபெறும். 1410

THE JAFFNA ACADEMY
&
School of Technology
Chundikuli, Jaffna.
:Phone No. 617

Re-opens on 3-5 69

Theory Classes for School Students preparing for the University Entrance December 1969 Examination Medicine and Engineering.

Classes after 4-30 p. M.

Director

29-4-69.

1554

## விளையாட்டுக்கழக நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், வெள்ளி

திருநெல்வேலியில் புதிதாக அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட சிவன் விளையாட்டுக் கழகத்தின் புதிய நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரியப்பட்டனர்.

தலைவர்- திரு. ஆ. துரைராசசிங்கம் (யாழ். உதவி மேயர்) உபதலைவர்- செல்வன் சிவலிங்கம். செயலாளர்- செல்வன் சி. லோகநாதன், உப செயலாளர்- செல்வன் மு. பரமதேவன் பொருளாளர்- செல்வன் ச. இராசசிங்கம். உபபொருளாளர்- செல்வன் ச. கௌரிசங்கர். 12பேர் கொண்ட நிர்வாகக் கமிட்டி ஒன்றும் தெரியப்பட்டது.

(கா.நி)

### பிரயாணிகள் சங்க உத்தியோகஸ்தர்கள்

வெள்ளவத்தை, வியா.

கொழும்பிலுள்ள வடமராட்சி பிரயாணிகள் சங்கத்தின் நடப்பு வருட நிர்வாக உத்தியோகத்தர்களாகப் பின் வருவோர் போட்டியின்றி ஏக மனதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர் த. சுந்தரலிங்

## உடுவில்பகுதி விளையாட்டுவிழா

உடுவில், வியாழன்

வலிகாமம் வடக்கு உடுவில் பகுதி மூன்றாவது ஆண்டு விளையாட்டு அடுத்த மாத நடுப்பகுதியில் நடைபெற விருக்கிறது. அடுத்த மாதம் 13-ம், 14-ம் திகதிகளில் நடைபெற விருக்கும் இவ்விழாவை சுன்னுகம் ஸ்கந்தவரோதயா கல்லூரியில் நடத்த ஒழுங்குகள் செய்யப்பட்டு வருகின்றன.

கரபந்தாட்டம், தாச்சி, மென்பந்துக் கிரிக்கட், உதைபந்தாட்டம், 25 மைல் சைக்கிள் ஓட்டம், மரதன் ஓட்டம், குண்டெறிதல், கயிறு இழுத்தல் போன்ற விளையாட்டுப் போட்டிகள் இவ் விழாவில் இடம் பெறுகின்றன.

வலிகாமம் வடக்குக காரியாதிகாரியும், வலி-வடக்கு உடுவில் பகுதி விளையாட்டுச் சங்கத் தலைவருமாகிய திரு. பி. எல். பற்றிக்ஸும் வலி-வடக்கு விளையாட்டுக் காரியஸ்தரும், விளையாட்டுச் சங்கச் செயலாளருமான திரு. ஏ. முருகையாவும் இவ்விளையாட்டு விழாவை நடத்த ஒழுங்குகள் செய்து வருகின்றனர்.

விளையாட்டு அமைச்சின் நிர்வாகஸ்தர் டாக்டர் எச். எஸ். ஆர். குணவர்த்தனு பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

இலங்கை பிரஜாவுரிமை

# மனுதாரர் வசிக்கும் பகுதியிலேயே விசாரணை

## 'அரசாங்கம் ஆலோசனை

கோட்டை, வியாழன்

இலங்கை பிரஜாவுரிமை கேட்டு விண்ணப்பம் செய்துள்ளவர்கள் வசிக்கும் பகுதிகளிலேயே அவர்களின் விண்ணப்பங்களின் மீது விசாரணைகள் நடத்துவதற்கான கிளைக்காரியாலயங்களை ஏற்படுத்துவதுபற்றி அரசாங்கம் ஆலோசித்து வருவதாகத் தெரிகின்றது.

தற்பொழுது அனேகமாக எல்லா விண்ணப்பகாரர்களுமே கொழும்புக்கு அழைக்கப்பட்டு விசாரிக்கப்படுகின்றன. வெளிமாகாணங்களிலிருந்து விண்ணப்பம் செய்கிறவர்களைவெளிமாகாணங்களிலேயே விசாரணை நடத்தவேண்டுமென்றும், கொழும்புக்குச்சென்று வருவது இவர்களுக்கு பெரும் சிரமமாக இருப்பதாகவும் பலரும் கவலை தெரிவித்து வந்துள்ளனர். இதன் பேரில் இப்பொழுது விண்ணப்பதாரர்களை அவர்கள் வசிக்கும் பகுதிகளிலேயே அதிகாரிகளை அனுப்பி விசாரணை நடத்துவதா அல்லது அப்பகுதிகளில் கிளை அலுவலகங்களைத்திறப்பதா என்பது பற்றி அரசாங்கம்ஆலோசிப்பதாகத் தெரிகின்றது.

இந்த ஏற்பாடுகள் விண்ணப்பங்களின் எண்ணிக்கையைப் பொறுத்தே செய்யப்படும் என்று தெரிகின்றது அதிக விண்ணப்பங்கள். கிடைத்துள்ளபகுதிகளில் முதலில் இந்த ஏற்பாடுகள் செய்யப்படலாம். குறைவான விண்ணப்பங்கள் அனுப்பியுள்ள பகுதிகளில் உள்ள மனுதார் கொழும்புக்கே அழைக்கப் படுவர் என்று தெரிகின்றது.

# "தம்மைத்தாமே பயிற்றுதல்வேண்டும்"

## பிரிவுபசாரத்தில் ஓய்வுபெறும் ஆசிரியகலாசாலை அதிபர்

யாழ்ப்பாணம், வெள்ளி

'ஆசிரிய பயிற்சிக்கல்லூரிக்கு அதிபர்கள் வருவார்கள் போவார்கள். ஆசிரியமாணவரின் பயிற்சி அதிபரில் தங்கியிருக்கவில்லை. மாணவர்கள் தம்மைத்தாமே பயிற்றிக் கொள்ளுதல்வேண்டும். அவ... வாரோ ஒரு ஸ்தாபனத்தின் முன்னேற்றமும் அதன் அதி

### 'புத்தர் நெறியில் வாழ்வோம்'

வெள்ளவத்தை, வியா.

''அன்பு தழைக்கவும் சமாதானம் ஓங்கவும் மக்கள் சுபிட்சமாக வாழவும் இந்த நாட்டில் பௌத்த தர்மம் பரவியது நா...

# 'இருகட்சிகளின் ஒப்பந்தம் என்றுமே பயனளிக்காது'

## கூட்டாட்சிக் கட்சிகளின் மேதின கூட்டத்தில் திரு. இரத்தினவீரா

யாழ்ப்பாணம், வெள்ளி

'1965-ம் ஆண்டு தேர்தல் பிரசாரத்தின் போது, யு. என். பி. ஆட்சிக்கு வந்தால் சகல கட்சித் தலைவர்களையும்அழைத்து வட்டமேசை மகாநாடு கூடி மொழிப் பிரச்னை உட்பட இந்நாட்டு மக்களை எதிர் நோக்கியுள்ள சகல பிரச்னைகளையும் தீர்க்கப்போவதாக பிரதமர் டட்லி சேனநாயக்கா கூறினுர். யு. என் பி. ஆட்சிக்கு வந்ததும் வட்டமேசை மகாநாடு கூட்டாமல் மேசைக்குக் கீழே மிக ரகசியமாக தமிழரசுக் கட்சித் தலைவரைமட்டும் அழைத்து பேச்சுவார்த்தை நடத்தி ஒப்பந்தம் செய்தார். இன்று அந்த ஒப்பந்தம் தவிடுபொடியாகி விட்டது.'

யாழ்ப்பாணம் பஸ்நிலையத்தில் நடந்த கூட்டாட்சிக் கட்சிகளின் மேதின விழாவில் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த திரு. எம். பி. ஏச். இரத்தின வீரா பேசும்போது மேற்கண்டவாறு கூறினுர்.

திரு. வி. பொன்னம்பலம் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் திரு. இரத்தின வீரா மேலும் கூறியதாவது:

பிரதமர் ஆட்சிக்கு வந்ததும், வட்டமேசை கூட்டி சகல பிரச்னைகளையும் தீர்ப்பார் என மக்கள் எதிர் பார்த்தனர். திருமதி சிறிமா பண்டாரநாயக்கா, டாக்டர் என். எம். பெரேரா, திரு. பீட்டர் கெனமன், திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம், திரு. பிலிப்குணவர்த்தன, திரு. சி. பி. டி. சில்வா, டாக்டர் டபிள்யு. தகநாயக்கா, திரு. எஸ். தொண்டமான் ஆகியோரை அழைத்து வட்டமேசையில் சுற்றிவர அமர்த்தி ஒவ்வொரு பிரச்னையாக அலசி ஆராய்ந்து நல்ல முடிவு எடுப்பார் என மக்கள் நம்பியிருந்தனர். ஆனல் நடந்ததென்ன? பிரதமர் இரவோடிரவாக தமிழரசுத் தலைவரைமட்டும் அழைத்து பேச்சுவார்த்தை நடத்தினர். தேர்தல்காலத்தில் தனிப்பட்ட இரு கட்சித் தலைவர்கள் ஒப்பந்தம் செய்தார்களென்றும் தெரிந்ததும் பெண்கள் மத்தியில் அரசியல் தலையெடுக்கிறது. ஆதலால் மேதினத்திலும் அரசியல் பேசித் தீர்க்கவேண்டும்.

65-ம் ஆண்டுதான் பிரதமருக்கு தேசிய ஐக்கியத்தைப்பற்றி எண்ணம் உருவானது. யூ. என். பி. கட்சிக்கு 66ஸ்தானங்கள் கிடைத்தபடியால்தான் இந்தத் தேசிய ஐக்கிய எண்ணம் உருவானது. யூ. என். பிக்கு 76 ஸ்தானங்கள் கிடைத்திருந்தால் என்ன நடந்திருக்கும். தேசியஐக்கியம் பற்றிப் பிரதமர் பேசியிருப்பாரா? 60ம் ஆண்டு மார்ச் தேர்தலில் யூ என் பிக்குப் பெரும்பான்மை கிடைத்தபோது தேசிய ஐக்கிய எண்ணம் ஏன் ஏற்படவில்லை.

முன்னுள் குருநாகல் எம். பி.யும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினருமான திரு. ஜெயபத்திராஞ கூறியதாவது: ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு விஷயம் அரசியலாக உருவெடுத்துள்ளது. இலங்கையில் மொழி அரசியலாக மாறிவிட்டது. வெள்ளையர் ஆட்சியைக் கைவிட்டுப் போகும்போது இனத்தை இனம் பிரித்தாளும் முறையைக் காட்டிவிட்டுச் சென்றுர்கள். அந்தமுறை இன்று நீடித்து வருகிறது. இது ஏகாதிபத்தியவாதிகளின் ராஜதந்திரம்.

இந்த நாட்டில் முதலாளித்துவ சமூக கட்டுக் கோப்பில் மொழிப்பிரச்னையைத் தீர்த்துவிடலாமென எண்ணுவது பகற்கனவு. முதலாளித்துவ அமைப்பு இருக்கும்வரை மொழிப்பிரச்னைக்குத் தீர்வுகாண முடியாது இந் நாட்டிலுள்ள சிங்கள தமிழ் தொழிலாளர்கள் ஒன்றுசேர்ந்து ஒரு சோஷலிச ஆட்சியை உருவாக்குகின்றுர்களோ அன்றுதான் மொழிப்பிரச்னையுட்படச் சகல பிரச்னைகளுக்கும் தீர்வுகாணலாம். அதுவரை இந்நாட்டில் வடக்கிலும், தெற்கிலும் மொழியைக் காட்டி மக்களை ஏமாற்றும் செயல் தொடர்ந்து நடைபெறும். இதைத் தவிர்க்க முடியாது.

திருவாளர்கள் எஸ். பாலசிங்கம், வி. கணேசன், எம். சி. சுப்பிரமணியம், ந ராசா மற்றும் பலர் பேசினுர்கள்.

# 3பௌத்ததமிழ்பாடசாலைகளை அரசாங்கம் கையேற்றது

## மற்றும் 2 பாடசாலைகள் விரைவில் பொறுப்பேற்கப்படும்

பருத்தித்துறை, வியாழன்

யாழ். குடாநாட்டில் சிறுபான்மைத்தமிழரின் கல்வி வளர்ச்சிக்கென அகில இலங்கை தமிழ் பௌத்த காங்கிரசினுல் நிறுவி நிர்வகிக்கப்பட்டு வந்த ஐந்து பௌத்த தமிழ்ப் பாடசாலைகளுள் மூன்று பாடசாலைகளை அரசாங்கம் கையேற்றுள்ளது. கரவெட்டி ஸ்ரீகாந்த வித்தியாலய, அச்சுவேலி விபாசி வித்தியாலய அல்வாய் ஆனந்த செமகே வித்தியாலய ஆகிய மூன்றும் அடுத்த மாதம் முதலாந்திகதியிலிருந்து அரசாங்க மகா வித்தியாலயங்களாக இயங்கும் இப்பாடசாலைகளில் கப்படுமென்றும் தெரிகிறது.

புத்தூர், பூநகரி ஆகிய இடங்களில் நிறுவப்பட்டுள்ள பௌத்த தமிழ்ப் பாடசாலைகளும் விரைவில் அரசாங்கத்தால் கையேற்கப்படவிருக்கின்றன.

இப்பாடசாலைகளில் ஆசிரியராகக் கடமையாற்றுபவர்களுக்கு மாணவ ஆசிரியராகத் தம்மைத் தகுதியாக்கும் சந்தர்ப்பங்கொடுக்கப்படுமென்றும், அவர்களுக்கு ஆசிரியருக்குரிய சகல சலுகைகளும் அளிக்கப்படுமென்றும் கல்வி அமைச்சர் திரு. ஐ. எம். ஆர். ஏ. இரியகொல தம்மைப்பேட்டி கண்ட அகில

ராஜா 109வது தினம்
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-45
எம். ஜி. ஆர்-ஜெயலலிதா
நடித்த
ஒளிவிளக்கு
(ஈஸ்ட்மென் கலர்)
மாதர்களுக்குஅரைக்கட்டணம்

இணுவில்
ஸ்ரீ காலிங்கன்
தினசரி: 6-30, 9-30 மணி
பிரிபோயா, போயா 2-30மணி
ஜெய்சங்கர் - சோ
நடித்த
லக்கி
எக்ஸ்பிரஸ்

ராணி
[யாழ்ப்பாணம்]
[தினசரி 3காட்சிகள்]
* ஜெய்சங்கர்
* விஜயகுமாரி
நடித்த
ஜீவனும்சம்

வின்ஸர் யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜீ வ ஞ ம் ச ம்

## வின்ஸர் யாழ்ப்பாணம்

தினசரி 4 காட்சிகள்

★ சிவாஜிகணேசன் ★ ஜெயலலிதா

ஏ. வி. எம். ராஜன், ஜோதிலக்ஷ்மி

சோ, நாகேஷ்

நடித்த

ராம்குமார் பிக்சர்ஸ்

## கலாட்டா கல்யாணம்


## இப்பொழுது திரையிடப்படுகிறது!

## யாழ் வெலிங்டன் திரையில்

தினசரி பி. ப. 2-30, மாலை 6-00 இரவு 9-30 மணிக்கு

போயா முன்தினம் போயா தினம்,

விடுமுறை நாட்களில் காலை 10-00 மணிக்கு



பத்மஸ்ரீ குணசித்திர நடிகர்

பானுமதி — எஸ். வி. ரங்கராவ்

ஏ. வி. எம். ராஜன் - பண்டரிபாய்

முத்துராமன் — பாரதி — நாகேஷ்

நடிக்கும்

வாசு பிலிம்ஸ் அளிக்கும்

## பூவும் பொட்டும்

டைரக்ஷன்

தாதாமிராசி

4-வது வாரம்

இங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) ஸ்ரீ கிருஷ்ணா (திருமலை)

எம். ஜி. ஆர். — ஜெயலலிதா

நடிந்த

## சந்திரோதயம்


ராட்சி பிரயாணிகள் சங்கத்தின் நடப்பு வருட நிர்வாக உத்தியோகத்தர்களாகப் பின் வருவோர் போட்டியின்றி ஏக மனதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர் த. சுந்தரலிங்கம் (பொதுவேலைத் திணைக்களம்), உப தலைவர்- திரு. ஏ. கே சுப்பிரமணியம் (அஞ்சல் திணைக்களம்), பொதுச்செயலாளர் - திரு. க. பேரம்பலம் (தலைமை அஞ்சலகம்). பொருளாளர்-திரு. பி. வேலாயுத பிள்ளை (பொது வேலைத் திணைக்களம்) ஐவர் கொண்ட நிர்வாகசபைக் குழுவும் தெரிவு செய்யப்பட்டது.

## நினைவு தினம்

வல்வெட்டித்துறை, விய

கவிஞர் யாழ்ப்பாணனின் (வே. சிவக்கொழுந்து) முதலாவது சிரார்த்த தினம் படுத்தித்துறையில் கொண்டாடப்பட்டது.


மானிப்பாய்

## வெஸ்லி சினிமா

தினசரி 6-30, 9-30 மணி

பிரிபோயா, போயா 2-30 மணி

சிவாஜி - சௌகார்ஜானகி

நடித்த

## பார் மகளே பார்

இன்று மாலை 2-30க்கு

விசேட மெற்னி உண்டு.

## MANOHARA

JAFFNA

Daily 4-45, 7& 9-45 P.M.

Poya, Pre-Poya 10-30a. m.

John Mills, Hayley Mills

in

THE FAMILY WAY

(Teanage Story)

## REGAL at JAFFNA

Daily 4-45, 7 &9-45 p m.

Poya, Pre-Poya 10-30 A.M.

Kirk Douglas

Richard Harris

in

THE HEROES OF TELEMARK


...க்கு அதிபர்கள் வருவார்கள் போவார்கள். ஆசிரியமாணவரின் பயிற்சி அதிபரில் தங்கியிருக்கவில்லை. மாணவர்கள் தம்மைத்தாமே பயிற்றிக் கொள்ளுதல்வேண்டும். அவ்வாறே ஒரு ஸ்தாபனத்தின் முன்னேற்றமும் அதன் அதிபரில் தங்கியிருக்கவில்லை. அங்கு பணியாற்றும் உத்தியோகஸ்தர்களிலும் அதன் முன்னேற்றம் தங்கியுள்ளது'

நல்லூர் அரசினர் ஆசிரிய பயிற்சிக்கலாசாலை அதிபராயிருந்து தமது பத்தொன்பதுவருட சேவையின்பின் ஓய்வுபெறும் திரு. ஜே. ஜி. அரசரத்தினம், கலாசாலை ஆசிரிய மாணவர்களாலும், விரிவுரையாளர்களாலும் தமக்கு அளிக்கப்பட்ட பிரிவுபசாரத்திற்கு நன்றிதெரிவித்துப்பேசுகையில் குறிப்பிட்டார்

உதவி அதிபர் திரு. கே. எஸ். நடராசா தலைமையில் விழா நடைபெற்றது. ஆசிரியத்தொழில் தமக்குமகிழ்ச்சி தருவதாகுமென்றும், புதிய புதிய மாணவருடன் பழகி அவரவர் இயல்புகளை அறிய இத்தொழில் உதவுவதாகவும் திரு. அரசரத்தினம் சொன்னார்.

விரிவுரையாளர்களும் ஆசிரிய மாணவர்களும் ஓய்வு பெறும் அதிபரின் சிறப்பியல்புகள் பற்றி உரையாற்றினர்.

......

## இன்று

யாழ்ப்பாணம், வெள்ளி

அகில இலங்கை இந்துமாமன்ற ஆலயப் பிரவேசக் குழுவின் ஆதரவின் கீழ் இறைவழிபாடும் ஆலயப் பிரவேசமும் என்னும் பொருள்பற்றி இன்று மாலை யாழ் இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் ஆராயப்படும்.

திரு. சி. தம்பித்துரை தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில், இந்துமாமன்ற உபதலைவர் திரு. கே. லஷ்மணஐயர், திருவாளர்கள் த முத்தையா, சி. பொன்னையா, ஏ. எம். செல்லத்துரை, த. துரைசிங்கம், எஸ். அம்பிகைபாகன் ஆகியோர் பேசுவார்கள்.


## வானொலி ரசிகர்களே!

வானொலி மஞ்சரி- தமிழ், ஆங்கிலம், சிங்களம் மும்மொழிகளிலும் கிடைக்கும்-விலை:25 சதம்.

வீடுகளில் இருக்கவேண்டியது-வானொலி மஞ்சரி.

யாழ்ப்பாணப்பகுதிக்கு நாம் விற்பனையாளராக்கப் பட்டுள்ளோம்.

## அன்பு புத்தகசாலை

27 D, பெரியகடை, யாழ்ப்பாணம்.


## ...வாழ்வோம்'

வெள்ளவத்தை, வியா.

''அன்பு தழைக்கவும் சமாதானம் ஓங்கவும் மக்கள் சுபிட்சமாக வாழவும் இந்த நாட்டில் பௌத்த தர்மம் பரவியது நாங்கள் செய்த பெரும் தவப்பயனாகும். புத்தர் பெருமானின் போதனைகளை நாம் பின்பற்றி வாழ்க்கை நெறிகளைச் செம்மைப் படுத்த வேண்டும்'' என வெள்ளவத்தை லலிதகலா மண்டலய கலைக் கல்லூரியில் நடைபெற்ற வெசாக் உற்சவத்தின் போது கல்லூரி அதிபர் திரு. ஏ குணசேகராபேசுகையில்கூறினார். திரு, சரத். குணசேகரா, செல்வி மானே ஆகியோரும் பேசினர்.

## யாருடைய அடைவுச்சீட்டு?

70 ரூபாய்க்கு ஒரு நகையை அடைவு வைத்த ஒருவரின் அடைவுச்சீட்டு வெலிங்டன் தியேட்டருக்குச் சமீபத்தில் கிடக்கக் கண்டெடுத்த மு. இப்ராகிம் என்பவர் 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைத்திருக்கிறார். உரியவர் காரியாலயநேரத்தில்வந்து பெற்றுக் கொள்ளலாம்.

## கோர்ட்டுக்கு வர உத்தரவு

கொழும்பு, விய.

சீனசார்பு கம்யூனிஸ் கட்சித் தலைவர் திரு. என். சண்முகதாசனை இம்மாதம் 3-ம் தேதி கொழும்பு மத்திய நீதிமன்றத்தில் ஆஜராகும் படி நேற்று நோட்டீஸ் வழங்கப்பட்டது.

எடுப்பார் என மக்கள் நம்பியிருந்தனர். ஆனால் நடந்ததென்ன? பிரதமர் இரவோடிரவாக தமிழரசுத் தலைவரைமட்டும் அழைத்து பேச்சுவார்த்தை நடத்தினார். தேர்தல்காலத்தில் தனிப்பட்ட இரு கட்சித் தலைவர்கள் செய்துகொள்ளும் ஒப்பந்தம் பயன்தராதென்றும் பதவிக்கு வரும் மூன்றாவது கட்சி அந்த ஒப்பந்தத்தை அமுல்செய்ய விடாது முறியடித்துவிடுமென்றும், அதனால் சர்வ கட்சித் தலைவர்களையும் அழைத்து பிரச்னைகளுக்கு முடிவுகாணவேண்டுமென்றும் திரு. டட்லி சேனநாயகா கூறினார். அப்படிக் கூறிய பிரதமர் சர்வகசித் தலைவர்களை அழைக்கவுமில்லை; வட்டமேசைமகாநாடு கூடவுமில்லை. உண்மையில்பிரச்னைகளுக்குத் தீர்வுகாணவேண்டும் என்ற எண்ணம் ஐக்கியதேசியக் கட்சியினருக்கு இல்லையென்பதையே இது எடுத்துக்காட்டுகிறது.

இரு கட்சித் தலைவர்கள் மட்டும் செய்யும் எந்த ஒப்பந்தமும் நிறைவேறாது என்பதை கடந்த கால அரசியல் சரித்திரம் தெளிவாக்கிவிட்டது. 57-ம் ஆண்டு செய்யப்பட்ட பண்டா செல்வநாயகம் ஒப்பந்தமும் 65-ம் ஆண்டு செய்யப்பட்ட டட்லி - செல்வநாயகம் ஒப்பந்தமும் தோல்வியில்தான் முடிந்தது.

இன்று ஒவ்வொரு மக்களின் வாழ்வோடும் அரசியல் சம்பந்தப்பட்டிருக்கிறது. அடுப்படியில் சோற்றுக்கு அரிசியில்லையென்றும், சம்பலுக்கு மிளகாய் இல்லை


## " ராதா "

## பத்மினி ஜவ்வாது பத்தி

நல்ல சுகந்த மணமுள்ள பத்மினி ஜவ்வாது பத்தியை பாவித்து மகிழுங்கள். இதிலுள்ள வாசனை நீங்கள் விரும்பக்கூடிய நறுமணம் உள்ளவை. உங்கள் இல்லங்களில் நறுமணம் கமழ பாவித்து இன்புறுங்கள்.

தயாரிப்பாளர்கள்:

ராதா பெர்பியூமரி அன் ராதா புறடக்ஸ்

ஏகவிநியோகஸ்தர்கள்:

## எஸ். சுப்பிரமணியம்

## அன் கொம்பனி

(மருந்து, மருந்துச்சரக்கு, வாசனைதிகள் இறக்குமதியாளர்களும் மொத்த, சில்லறை வியாபாரிகளும்.)

53, கே. கே. எஸ். றோட், பெரியகடை, யாழ்ப்பாணம்.

''பாலேந்திரா பில்டிங்'' 160, செட்டியார் தெரு, கொழும்பு-11.

போன்: 541 Residence: 7068


அச்சுவேலி விபாசி வித்தியாலய அல்வாய் ஆனந்த செமகே வித்தியாலய ஆகிய மூன்றும் அடுத்த மாதம் முதலாந்திகதியிலிருந்து அரசாங்க மகா வித்தியாலயங்களாக இயங்கும் இப்பாடசாலைகளில் பௌத்தமதம் கட்டாய பாடமாக இருக்குமென்றும், தமிழ், ஆங்கில, சிங்கள மொழிகளும் போதிக்...

## தீர்ப்பு ஒத்திவைப்பு

வல்வெட்டித்துறை. வியா.

கரணவாய் தெற்கைச் சேர்ந்த செ. கந்தசாமி என்பவர் அதே இடத்தைச் சேர்ந்த எஸ். சின்னையா என்பவருக்குக் கடந்த தைமாதம் 14-ந் திகதி உளியால் குத்திக் காயம் விளைவித்ததாகப் பொலிசாரால் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராசா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டது.

விசாரணையின் பின்னர் மாஜிஸ்திரேட் எதிரியைக் குற்றவாளியாகக்கண்டு தீர்ப்புக் கூறுவதை இம்மாதம் 7-ந் திகதிக்கு ஒத்திவைத்துள்ளார்.

## இமயமலையில் ஏறிய ஏழுபேரும் மரணம்

காட்மாண்டு மே. 1

இமயமலை மீது ஏறுவதில் ஈடுபட்டிருந்த 5 அமெரிக்கர்கள் உட்பட 7பேர் கொண்ட கோஷ்டியைச் சேர்ந்த அனைவருமே விபத்துக்குள்ளாகி மரணமாகியுள்ளதாகச் செய்தி கிடைத்துள்ளது. காட்மாண்டுவிலுள்ள அமெரிக்க தூதரகத்துக்கு கிடைத்த ஊர்ஜிதமற்ற செய்திகள் இதனைத் தெரிவித்தன மேற்கொண்டும் தகவல்கள் எதிர்பார்க்கப் படுகின்றன.

யாக்கும் சந்தர்ப்பங்கொடுக்கப்படுமென்றும், அவர்களுக்கு ஆசிரியருக்குரிய சகல சலுகைகளும் அளிக்கப்படுமென்றும் கல்வி அமைச்சர் திரு. ஐ. எம். ஆர். ஏ. இரியகொல தம்மைப் பேட்டி கண்ட அகில இலங்கைப் பௌத்த காங்கிரஸ் பிரதிநிதிகளிடம் தெரிவித்தார்.

## சமாதானம்செய்ய சென்றவர்

### காயங்களுடன் ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம் வெள்ளி

கணவன் மனைவி சண்டையை தீர்த்துவைப்பதற்காகச் சென்ற ஒருவர் உலக்கையால் படுமே சமாகத் தாக்கப்பட்டாராம்.

சங்கானை கிழக்கில் நடைபெற்ற இச்சம்பவத்தில் படுகாயமடைந்த செல்லமுத்து சண்முகநாதன் (28) என்பவர் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அடுத்த வீட்டில் ஒரு கணவனுக்கும் மனைவிக்குமிடையே நடைபெற்ற சச்சரவைத் தீர்த்துவைக்கத்தான் சென்றபோது குறிப்பிட்ட கணவன் தன்னை உலக்கையால் தாக்கியதாக இவர் பொலிசாருக்குத் தெரிவித்துள்ளார். (கா. நி)

## இடம்மாறியது

சுழிபுரம், வியாழன்

கடந்தபன்னிரண்டுஆண்டுகளாக இயங்கிவந்த இடத்திலிருந்து சங்கானைக் கோவில்பற்று பதிவுகாரர் கந்தோர் சுழிபுரம் தபால் நிலையத்திற்கு அருகாமையாக இம்மாதம் முதல் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.


## வாரத்தில் ரூபா ஐம்பது

### இலவசமாக உங்களுக்கு கிடைக்கிறது

போயா வாரமலரிலும் போயாவுக்கும் பின் 2-ம், 4-ம், 6-ம் நாட்களிலும் 'ஈழநாடு' நடத்தும் நவீன போட்டிகளில் கலந்து கொள்ளுகிறீர்களா? ஒரு வாரத்தில் ஐம்பது ரூபாயை தட்டிக்கொண்டு போகும் அரிய வாய்ப்பை உங்களுக்கு அளித்திருக்கிறோம். மூளைக்கு வளர்ச்சியும் மனதுக்கு மகிழ்ச்சியும் கைக்கு பணத்தையும் தரும் இந்த எளிமையான போட்டிகளில் கலந்து கொள்வதற்கு தினமும் உங்கள் 'ஈழநாடு' பிரதியை வாங்கி வாசியுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மே. ஆஸியாவில் அமைதி கெடுவதற்கு இஸ்ரேல்தான் முழுக்காரணம்

## பாதுகாப்பு சபையிடம் அரபுக் குடியரசு முறையீடு

வாஷிங்டன் மே 1

மேற்காசிய நெருக்கடிக்கும் அங்கு நிலைமை மோசமாகிக்கொண்டிருப்பதற்கும் இஸ்ரேல் தான் காரணமென்றுஐக்கியஅரபுக் குடியரசு ஐ. நா. பாதுகாப்புசபையிடம் முறையிட்டிருக்கின்றது

ஐக்கிய அரபுக்குடியரசின் பாதுகாப்பு அமைச்சர் டாக்டர் ரியார்ட் பாதுகாப்பு சபைக்கு அனுப்பியுள்ள ஒரு குறிப்பில்- இந்த முறைப்பாட்டை தெரிவித்துள்ளார்.

மேற்காசியாவில் நிலைமை மோசமாகிக் கொண்டிருப்பதற்கும் உலகஅமைதிக்கு பயமுறுத்தல் நீடித்துக் கொண்டிருப்பதற்கும் இஸ்ரேல்தான் காரணம் என்று குறிப்பிட்டுள்ள அவர்கடந்த செவ்வாய்க் கிழமை இரவு நைல் நதியின் மேற்குக் கரைப்பகுதியில் இஸ்ரேலியர் நடத்திய அத்துமீறிய தாக்குதல் பற்றியும் குறிப்பிட்டிருக்கின்றார்.

ராணுவ முகாமுக்கு சுமார் நூறு மைல்களுக்கப்பால் பொதுமக்கள் வாழும் பகுதியையும் தொழில் நிலையங்களையும் குறிவைத்து இஸ்ரேலியர் குண்டு வீசியதாக அவர் தெரிவிதது‌ள்ளார்.

கடந்தசெவ்வாய்க்கிழமை இஸ்ரேலிய விமானங்கள் நைல்நதியில் சில பாலங்களையும் தொழில்நிலையங்களையும் குண்டுவீசி தகர்த்ததாகஅறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்காசியாவிலிருக்கும் வெளிநாட்டு நிருபர்கள் இஸ்ரேலியரால்குண்டு வீசப்பட்டதாகக் கூறப்படும் பகுதிகளை அரபுக்குடிரசு விமானம் ஒன்றில் போய்ப்பார்த்தனர். இஸ்ரேலியரால்தாக்கப்பட்டதாகக் கூறப்படும் பகுதிகளை தாங்கள் பார்த்ததாகவும் சேதங்களைக் காணவில்லையென்றும் சில நிருபர்கள் கூறினார்கள்.

### டாக்டர் ஜாரிங் ஆலோசனை

மேற்காசிய அமைதிக்கான முயற்சிகளில் ஈடுபட்டுவரும் டாக்டர் குனார் ஜாரிங் ஐ நா. பொதுக்காரியதரிசி யுதாண்டை சந்தித்து அவருடன் ஆலோசனைகள் நடத்துகிறார். மேற்காசியாவில் தற்போது ஏற்பட்டிருக்கும் நிலைமைபற்றி நான்கு வல்லரசுகள் மேற் கொண்டிருக்கும் டாக்டர் ஜாரிங் யுதாண்டுடன் ஆலோசனைகள் நடத்துகின்றார்.

## சகல இன ஒற்றுமையையே திரு. குணசிங்கா விரும்பினர்

### ஏ. ஈ. குணசிங்கா முத்திரை வெளியீட்டில் அமைச்சர் பிரேமதாசா

வெள்ளவத்தை, வியாழன்

''இலங்கையின் தொழிற்சங்க வரலாற்றிலும் தொழிலாளர்களின் வாழ்க்கை முறைகளிலும்காலஞ்சென்ற திரு. ஏ. ஈ குணசிங்க பெரிய மாறுதல்களை உண்டு பண்ணினர். அவர் ஒரு தீவிரமான தொழிற்சங்கவாதியாகத் திகழ்ந்தார். தொழிலாளர்களின் தினமாகிய மே முதல் திகதி தான் அவர் பிறந்தார். அதனால் அவரது சிறப்பு இன்னும் பெருகியுள்ளது.''

இவ்வாறு உள்ளூராட்சி அமைச்சர் திரு. ஆர். பிரேமதாசா கொழும்பு தலைமை அஞ்சல் அலுவலகத்தில் நடைபெற்ற ஏ. ஈ. குணசிங்கா ஞாபகார்த்த முத்திரை வெளியீட்டு வைபவத்தில் சிறப்பு அதிதியாகக் கலந்துகொண்டு பேசுகையில் கூறினர்.

அமைச்சர் தொடர்ந்து பேசியதாவது:

இந்த நாட்டின் ஒரு சிறந்த அரசியல்வாதியாகவும், பௌத்தமதத்தின் காவலனுகவும் திரு. குணசிங்கா விளங்கினர். சகலஇன மக்களும் ஒற்றுமையுடன் வாழவேண்டும் என்பதே அவரது விருப்பமாக இருந்தது. அன்னரது முத்திரையை வெளியிட்டு கௌரவிப்பதில் நாம் பெருமைப்படவேண்டும்.

அமைச்சர் சம்பிரதாயப்படி குத்துவிளக்கேற்றி முத்திரையை முதல் இரத்துச் செய்தார். தபால் அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா நன்றி கூறினர்.

## "அரசாங்கத்தில் காங்கிரஸ் தொடர்ந்திருக்கும் காரணம்"

### திரு. சிவசிதம்பரம் விளக்கம்

யாழ்ப்பாணம், வெள்ளி

தமிழரசார்தேசிய அரசாங்கத்திலிருந்து வெளியேறியதற்கு கூறும் 3 காரணங்களும் திருப்திகரமானவையாக இல்லை. இதனலேயே நாம் தொடர்ந்தும்அரசாங்கத்தில் அங்கம் வகித்து வருகின்றேம்.

உடுப்பிட்டி எம். பி. யும் உபசபாநாயகருமான திரு. மு. சிவசிதம்பரம் நேற்று முன்தினமிரவு யாழ். கோட்டை மைதானத்தில் நடைபெற்ற் மேதினவிழாவில் பேசுகையில் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தேசிய அரசாங்கத்தில் தமிழரசுக்கட்சினயிர் அங்கம் வகிக்கும் போது நாமும் தான் அங்கு அங்கம் வகித்தோம்ஒரு சிங்கள ஆட்சியாளருடன் தமிழரின் இரு பெரும் கட்சிகளான நாம் வெவ்வேருக இயங்குவது எமக்கு வேதனையையே தந்தது. இதனுல் நாம் இருவரும் ஒன்ருக இணைந்து அரசாங்கத்தில் இருப்போம் என்று தமிழரசுக் கட்சியினருக்கு எத்தனையோ தடவை பணிவான வேண்டுகே ள்விடுத்தோம். அவர்கள் ஒன்றுபட்டு இயங்க மறுத்தார்கள்.

யாழ்ப்பாணத்தில் மே தினம் கொண்டாடுவது சம்பந்தமாக அரசாங்கதிபர் கூட்டிய மாநாடொன்றும் முதலாம் திகதியே மேதினம் கொண்டாடுவோம் என்ருர்கள். ஆனல் ஆட்சிமன்றத்தில் பேசும்போது பிரதமர் கூற்றுக்குச் செவிசாய்த்து 'வெசாக்' தினம் பௌத்தர்களுக்கு மட்டுமல்ல. அதுஇந்துக்களுக்கும் சித்திரைப் பௌர்ணமி தினம். எனவே நாம் முதலாம் திகதி யாழ்ப்பாணத்தில் கொண்டாட மாட்டோம் என்ருர்கள். வடக்கில் சொல்வது ஒன்று பின் தெற்கில் சொல்வது ஒன்று; கடைசியாகச் செயலில் செய்வது வேறென்று.

இந்துக்களுக்காக முதலைக் கண்ணீர் வடிக்கும் அமிர்தலிங்கம் போன்ற தமிழரசு எம். பிக்கள் தமிழ்க் காங்கிரஸார் இந்துப்பல்கலைக்கழகம் கேட்டபோது அதற்கு ஏன் மறுப்புத் தெரிவித்தார்கள். தமிழரசார் இந்துப்பல்கலைக்கழகத்துக்கு எதிர்ப்புத்

...கள் எஸ். ஆர். கனகநாயகம், வேலுப்பிள்ளை, கு தனபாலசிங்கம், ரி. சங்கரப்பிள்ளை ஆகியோருட்பட இன்னும் பலர் பேசினர்கள். (கா. நி.)

வெசாக்

## கொழும்பு நகரெங்கும் அலங்காரமயம்

வெள்ளவத்தை, வியா.

புனித வெசாக் உற்சவத்தை முன்னிட்டு நாட்டின் பல பாகங்களிலிருந்தும் பார்வையாளர்கள் கொழும்புத் தலைநகரத்திற்குள் குவிந்துகொண்டிருக்கின்றனர்.

இம்முறையும் கடந்த வருடங்களைப் போன்று பிரமாண்டமான செலவில் வெசாக் அலங்காரப் பந்தர்கள் கட்டப்பட்டுள்ளன. கிரிலப்பனையிலும், கொள்ளுப்பிட்டியிலும், கோட்டை காலிமுகத்திடல், மீன் சந்தை, மரக்கறிச் சந்தை, ஆகியவற்றிலும் கிராண்ட்பாஸ், பொரளை ஆகிய சந்திகளிலும் வெசாக் பந்தர்கள் போடப்பட்டுள்ளன.

வெசாக் பந்தர்களைப் பார்வை யிடுவதற்கென்றே விசேடமாக இ. போ. ச. வினர் 'பந்தர் சேவை' ஒன்றை வழமைபோல ஆரம்பித்துள்ளனர்.

வெளிநாடுகளிலிருந்தும் சில உல்லாசப் பிரயாணிகள் வெசாக் நிகழ்ச்சிகளைக் காண்பதற்கு இலங்கை வந்துள்ளனர்.

காலி வீதியில் வெள்ளவத்தை, பம்பலப்பிட்டி ஆகிய இடங்களில் கூத்து கொட்டகைகள் பெரியளவில் போடப்பட்டுள்ளன. சிங்கள-பௌத்த கலை, கலாசார நிகழ்ச்சிகள் இவற்றில் இடம்பெறும்.

கொழும்பிலுள்ள அரசாங்கத் திணைக்களங்களும் வெசாக் அலங்காரங்களைச் செய்துள்ளன

## "இரகசிய ஒப்பந்தத்தை இனியாவது வெளியிடட்டும்"

### சிறிமா கேட்கிறர்

கொழும்பு, செவ்.

'யு. என். பி. கட்சியும் தமிழரசுக்கட்சியும் தேசிய அரசாங்கத்தில் இணைந்தபோது ரகசிய ஒப்பந்தத்தை வெளியிடும்படி தாங்கள் கேட்டும் அவர்கள் வெளியிடவில்லை. இன்று தமிழரசுக்கட்சி தேசிய அரசாங்கத்திலிருந்து வெளியேறி விட்டது. ஆதலால் யு. என். பி. அந்த ரகசிய ஒப்பந்தத்தை நாட்டுமக்களுக்கு வெளியிட வேண்டும்.

கொழும்பில் நேற்று நடந்த கூட்டணிக் கட்சிகளின் மேதினக் கூட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயகா மேற்கண்டவாறு கூறினர்.

திருமதி சிறிமா பண்டாரநாயகா மேலும் கூறியதாவது:

அன்று தங்கள் வசதிக்காகக் கலியாணம் செய்த

## மேதின ஆர்ப்பாட்டங்களுக்கு பல நாடுகளில் தடை

### பிரிட்டனில் வேலை நிறுத்தம்

லண்டன், மே 1

ஐரோப்பிய நாடுகள் பலவற்றில் மேதின ஆர்ப்பாட்டங்களுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

பாரிஸில் ஜெனரல் டிகாலுக்கு ஏற்பட்ட தோல்வியைக் கொண்டாடுவதற்காக பிரமாண்டமானதொரு ஆர்ப்பாட்ட ஊர்வலத்திற்கு மாணவர்களும் எதிர்க்கட்சிகளும் ஏற்பாடுகள் செய்து கொண்டிருந்தன. ஆனல்ஆர்ப்பாட்டஊர்வலங்களை அரசாங்கம் தடை செய்து விட்டது. இதனுல் மாணவர்கள் தமது ஊர்வலத்தை ரத்துச்செய்துவிட்டு மாபெரும் பொதுக்கூட்டமொன்றுக்கு ஏற்பாடு செய்துள்ளார்கள்.

ஸ்பெயினிலும் மேதின ஆர்ப்பாட்டங்களுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளன.

போர்ச்சுக்கல் அரசாங்கம் மேதினக் கொண்டாட்டம் நடத்தவிருக்கும் ஸ்தாபனங்களுக்கு எச்சரிக்கை அறிவிப்புகள் விடுத்திருக்கிறது

நேற்று மின்சார நிறுவனமொன்றை தகர்த்தெறிவதற்கு ஆர்ப்பாட்டக்காரர்கள் முயற்சி செய்ததாகக் கூறப்பட்டது.

பிரிட்டனில் தொழிற்சாலைகளிலும் வேறு ஸ்தாபனங்களிலும் வேலை செய்யும் தொழிலாளிகள் மேதின வேலைநிறுத்தம் ஒன்றை நடத்துகிறார்கள். வேலைநிறுத்தங்கள் சம்பந்தமாக பிரிட்டிஷ் அரசாங்கம் கொண்டுவரவிருக்கும் புதிய சட்டமொன்றை எதிர்த்தே இந்த வேலைநிறுத்தங்கள் இடம்பெறுகின்றன. லண்டனிலும் வேறுபல பிரதான நகரங்களிலும் பத்திரிகை ஊழியர்கள் வேலைநிறுத்

''பல்கலைக்கழகத்தில்

## இந்துசமயக் கல்வியை கட்டாயபாடமாக்குக''

வெள்ளவத்தை, ஞாயிறு

1970-ம் ஆண்டு முதல் இலங்கைப் பல்கலைக்கழகங்களில் இந்துசமய பாடத்தைக் கட்டாயபாடமாக்கும்படி கோரும் பிரேரணையொன்றை வெள்ளவத்தை நாவலர் கழக இந்து மாணவர் மன்றம் கொண்டு வந்துள்ளது.

பல்கலைக்கழகத்தில் இந்துசமய பாடத்திற்குத் தகுந்த இடமளிக்கப் படாவிட்டால் க. பொ. த. (உயர்தர) பரீட்சைக்கு இந்து சமயத்தை ஒரு பாடமாக வைத்திருப்பதில் என்னபயன் என்று மேற்[illegible] மாணவர் மன்றம் கண்டனம்தெரிவித்துள்ளது.

சைவமாநாடுகளும், விழாக்களும் நடாத்திப் பெருமை[illegible] வனங்கள்[illegible] பல்க[illegible]கழகத்தில் இந்து சமய[illegible] மாணவர்களின் ... அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக மன்றச் செயலாளர் செல்வி புஷ்பதேவிகணபதிப்பிள்ளை தெரிவித்தார்.

......

### இந்திய காங்கிரஸ் கண்டனம்

புதுடில்லி, மே 1

தீண்டாமையை ஆதரித்துப் பேசியிருந்த பூரி சங்கராச்சாரியாரின் நடவடிக்கைக்கு இந்திய காங்கிரஸ் கட்சி லோகசபையில் இன்று கண்டனம் தெரிவித்தது. தேசியகீதத்தைக் கூட அவமதிக்கத்தக்க அளவுக்கு பூரி சங்கராச்சாரியாரின் ந[illegible]வடிக்கை இருந்ததாக [illegible]து பற்றிப் பேசிய அமைச்சர் ஷா கூறினர்.

### நிலைமை மோசம்

அம்மான், [illegible] 1

[illegible]

எம் பி. வீட்டு

### தந்திக்கம்பி திருட்டு

சுழிபுரம், வியாழன்

வட்டுக்கோட்டைத் தொகுதி ஆட்சி மன்ற உறுப்பினர் திரு. அ. அமிர்தலிங்கத்தின் மூளாயில் இருக்கும் இல்லத்துக்கு இணைக்கப்பட்ட தொலைபேசிக் கம்பிகள் திருடப்பட்டுள்ளன. இதனுல் நேற்றுப் பூராவும் தொலை பேசித்தொடர்புகள் துண்டிக்கப்பட்டுள்ளன.

சுழிபுரம் கி. ச.

### சியவசவை எதிர்க்கிறது

சுழிபுரம், வியாழன்

பாடசாலையில் கல்வி கற்கும் மாணவ மாணவிகளிடம் சியவச டிக்கட் விற்பதை உடன் தடைசெய்யு

தி. மு. க.

## ஆட்சித்தலைமையும் கட்சித்தலைமையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆட்சித்தலைமையும் கட்சித்தலைமையும்

## நெடுஞ்செழியன் போட்டி பற்றி கலைஞர் விளக்கம்

சென்னை, ஏப். 30

ஆட்சித் தலைமையும் கட்சித் தலைமையும் கருத்து வேறுபாடு இன்றி சுமுகமான உறவோடு இருக்க வேண்டும் என்ற அடிப்படையிலேயே பொதுச் செயலாளர் தேர்தல்பற்றி சிந்திக்கவேண்டும் என்று தமிழக முதலமைச்சர் திரு. கருணாநிதி நிருபர்களிடம் கூறினார்.

தி. மு. க. பொதுச்செயலாளர் பதவிக்கு திரு. நெடுஞ்செழியன் போட்டியிடுவது குறித்து கேட்ட பொழுதே அவர் இந்தக் கருத்தை வெளியிட்டார். நாவலருடன் திரு. கருணாநிதி முன்னர் பேச்சுவார்த்தைகள் நடத்தியது பற்றி தெரிவித்த கருத்துக்களை திரு. நெடுஞ்செழியன் மறுத்துவிட்டது பற்றிக் கேட்டபொழுது அவர் கூறியதாவது:

முதல்அமைச்சர் பதவிக்கு நானும் பொதுச்செயலாளர் பதவிக்கு நாவலரும் என்று பேரம் எதுவும் பேசவில்லை. அமைச்சரவையில் நீங்கள் உறுப்பினராக இருங்கள். எந்த இலாகா வேண்டுமானாலும் எடுத்துக்கொள்ளுங்கள். அத்துடன் பொதுச் செயலாளராகவும் இருங்கள் என்று சொன்னேன். அதற்கு அவர் மறுத்துவிட்டார்.

அப்படியானால் பொதுச் செயலாளர் பொறுப்பை நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொண்டேன்.

என்னை முதலமைச்சர் பதவிக்கு நாவலர் அவர்கள் முன்மொழிவதின் மூலம் இருவரிடையே எந்தவிதமான கசப்பு உணர்ச்சியும் இல்லையென்பதை கட்சித் தோழர்களுக்கும், நாட்டுக்கும் தெளிவாக்க இயலும் என்ற கருத்தை வலியுறுத்தினேன்.

பெப்ரவரி 9-ந் திகதி நடைபெற்ற சட்டமன்ற தலைவர் தேர்தலின்போது அண்ணா இரங்கல் தீர்மானம் நிறைவேறுகிறவரையில் அந்தக் கூட்டத்துக்கு தலைமைவகித்த நாவலர் உடனே நடந்த சட்டசபை கட்சித் தலைவர் தேர்தல் கூட்டத்துக்கு தலைமை வகிக்க மறுத்துவிட்டார்.

நானும் என். வி. நடராசனும் தேர்தல்கூட்டத்துக்கு நாவலரே தலைமை வகிக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டோம். "நான் ஒரு வேட்பாளர். எப்படி தலைமை வகிக்கமுடியும்" என்று நாவலர் கூறிவிட்டார். அதே காரணத்தை சொல்லி என் பெயரை முன்மொழியவும் மறுத்துவிட்டார். அவர் என் பெயரை முன்மொழிந்தோ, கூட்டத்திற்குத் தலைமைவகித்தோ நடத்தியிருந்தால் அவருடைய பெயரை ஒருவர் முன்மொழிவதும்இன்னொருவர் வழிமொழிவதும் பிறகு நாவலர் வாபஸ்பெறுவதும் என்ற நிகழ்ச்சி நடைபெறாமலே இருந்திருக்கும்.

என்னை முதலமைச்சராக முன்மொழியநாவலர் மறுத்ததற்கு நாவலர் அவர்கள் இப்போது கூறுகின்ற காரணத்தை பார்க்கும்போது நான் முதலமைச்சராவதை விரும்பவில்லை என்று தெரிகிறது. அதோடு என்னுடைய அமைச்சரவையில் அவர் அங்கம்வகிப்பது அவர் நிலைக்கு கௌரவமானது அல்ல என்று அவர் கருதியதாகவும் தெரிகிறது.

ஆட்சி தலைமையும், கட்சி தலைமையும் கருத்து வேறுபாடு இன்றி, சுமுகமான உறவோடு இருக்க வேண்டும் என்ற அடிப்படையில்தான் பொதுச்செயலாளர் தேர்தல்பற்றி சிந்திக்க வேண்டும்.

நான் இந்த விவகாரத்தை இதோடு முடித்து விடுகிறேன். மாறி மாறிப் பதில் சொல்லிக் கொண்டு மாசுமறுவற்ற கழகத் தோழர்கள் மனதைப் புண்படுத்த விரும்பவில்லை. இப்போதுதான் கழகத் தோழர்கள் நகரசபைத் தேர்தலில் கட்சிக்குப் பெரும் வெற்றி ஈட்டிக் கொடுத்து இருக்கிறார்கள். அவர்கள் மகிழ்ச்சியில் குறுக்கிடுவது நல்லதல்ல.

கேள்வி- நீங்கள் பொதுச் செயலாளர் பதவிக்கு போட்டியிடுவீர்களா?

கருணாநிதி: நான் பொதுச் செயலாளர் பதவிக்கு போட்டியிடுவது, போட்டியிடாதது பற்றி கழகத்தில் இருக்கிற முக்கியமானவர்கள் செயற்குழு உறுப்பினர்கள், மாவட்ட செயலாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள் இவர்களில் பெரும்பாலோரின் அபிப்பிராயத்திற்கு இணங்க நடந்து கொள்வேன்.

இந்த வேலைநிறுத்தங்கள் இடம்பெறுகின்றன. லண்டனிலும் வேறுபல பிரதான நகரங்களிலும் பத்திரிகை ஊழியர்கள் வேலைநிறுத்தத்தில் இறங்கியதால் பத்திரிகைகள் வெளிவரவில்லை முக்கியமான பத்திரிகைகள் நாட்டின் வடபகுதியில் அச்சிடப்பட்டன.

செக்கோஸ்லவாக்கியாவில் மேதினக்கொண்டாட்டங்களுக்கான ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேளையில் பொலிசார் நகரவீடுகளுக்குச் சென்று சோதனைகள் நடத்துவதிலும் விசாரணைகள் நடத்துவதிலும் ஈடுபட்டார்கள். மேதினத்தில் குழப்பங்களில் ஈடுபடக்கூடியவர்கள் என்று கருதப்படும் ஆசாமிகளைக் கைது செய்வதற்காகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாம். சுமார் 30பேர் இதுவரை கைதானதாகக் கூறப்பட்டது.

## மாதிரித் தீர்ப்பு நூலுக்குப் பரிசு

சென்னை, மே. 1

சிறந்த முறையில் எழுதப்பட்ட மாதிரித் தீர்ப்பு வழக்குகள் அடங்கிய இரண்டு நூல்களுக்கு 5000 ரூபா பரிசு வழங்க தமிழக அரசு தீர்மானித்துள்ளது. துணை நீதி மன்றங்களில் தமிழை ஆட்சி மொழியாக்கும் முதல் நடவடிக்கையாகவே இது எடுக்கப்பட்டுள்ளது.

சிவில் வழக்கில் சிறந்த மாதிரித் தீர்ப்பு அடங்கிய தொகுப்பு நூலுக்கு 3000 ரூபாவும், கிரிமினல் வழக்கில் சிறந்த மாதிரித் தீர்ப்பு அடங்கிய நூலுக்கு 2000 ரூபாவும் பரிசு வழங்கப்படுமென தமிழக அரசு அறிவித்துள்ளது.

அடுத்தவருடம்

## செக். கம். கட்சி மாநாடு

பிராக், மே. 1

செக்கோஸ்லவாக்கியாவில் பொதுத் தேர்தலையடுத்து அடுத்தவருடம் முற்பகுதியில் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநாடு நடைபெற வாய்ப்பிருப்பதாக அக்கட்சியின் புதிய தலைவரான டாக்டர் ஹுசாக் கூறியிருக்கிறார்.

கம்யூனிஸ்ட் கட்சியின் மகாநாடுநடத்தப்படவேண்டும் என்று கடந்த பலவருடங்களாக செக்கோஸ்லவாக்கிய கம்யூனிஸ்ட் கட்சியின் சீர்திருத்தக்காரர்கள் கோரிவந்திருக்கிறார்கள்.

... விழாக்களும் நடாத்திப் பெருமைப்படுகின்ற நிறுவனங்கள் இனிமேலாவது பல்கலைக்கழகத்தில் இந்து சமய ... மாணவர்களின் பிரச்னைபற்றிப் போதிய கவனம் எடுக்கவேண்டும் என்றும் இம்மன்றம் கோரியுள்ளது.

தமிழ்த் தலைவர்களுக்கும், இந்துமாமன்றத் தலைவருக்கும் இதுபற்றிய கடிதங்கள் ...

பாரிஸ் பேச்சில்

## எமக்கு இடம் வேண்டும்

### கம்போடிய கோரிக்கை

நாம்பென், மே. 1

பாரிஸில் நடைபெறும் வியட்னாம்அமைதிப் பேச்சுக்களில் கலந்துகொள்ள கம்போடியாவுக்கும் பிரதிநிதித்துவம் வேண்டுமென்று இளவரசர் சிகானுக் கோரிக்கை விடுத்திருக்கின்றார்.

வியட்னாம் தகராறில் கம்போடியாவும் சிக்கியிருப்பதால் அமைதிப் பேச்சுகளில் எமக்கும் சந்தர்ப்பமளிக்கப்பட வேண்டும் என்று அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

## ஈராக் அரசு கி. ஜெர்மனிக்கு முழு அங்கீகாரம்

பாக்தாத், மே. 1

கிழக்கு ஜெர்மனியை முழுமையாக அங்கீகரிப்பதென்று ஈராக் அரசாங்கம் முடிவுசெய்திருக்கின்றது.

மேற்காசியாவில் முதன்முதலாக கிழக்கு ஜெர்மனியை அங்கீகரிக்கும் முதலாவது கம்யூனிஸ்ட் அல்லாதநாடு இதுவாகும்.

## பூமிக்கடியில் அணுகுண்டு பரீட்சை

வாஷிங்டன், மே. 1

அமெரிக்கா நேற்று இரு அணுகுண்டு பரீட்சைகளை நேற்றுபூமிக்கடியில் நடத்தியது. இந்தப்பரீட்சைகள் வெற்றிகரமாக நடைபெற்றதாகவும் பரீட்சை நடைபெற்றபகுதியைத் தவிர வேறு பகுதிகளுக்கு கதிரியக்கத்தூசுகள் பரவக்கூடிய அபாயம்இல்லையென்றும் அறிவிக்கப்பட்டது.

... ஷா கூறினார்.

## நிலைமை மோசம்

அம்மான், மே. 1

இஸ்ரேல் யுத்த நிறுத்த எல்லையில் நிலைமை மோசமடைந்து கொண்டுபோவதாக அம்மானில்செய்திநிருபர்கள் மகாநாட்டில் ஜோர்ட்டான் மன்னர் ஹுசைனின் தெரிவித்தார்.

மே. ஆசிய பிரச்னைக்கு

## செயற்குழு

நியூயோர்க், மே 1

மேற்கு ஆசிய பிரச்னை சம்பந்தமாகக் கூடி ஆராய்ந்த 4 வல்லரசுகளும் தினம் கூடி இதுபற்றி ஆராய்வதற்கு செயற்குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

## தி. மு. க. வெற்றிபற்றி ஈ, வே. ரா.

சென்னை, ஏப். 30

காங்கிரஸின் போக்குத்தான்தி. மு. க. வின் பெரும்பான்மை வெற்றிக்குக் காரணம் என்று ஈ. வெ. ரா. பெரியார் கூறியிருக்கிறார். தமிழ்நாடு நகரசபை தேர்தலில் தி. மு. க. பெருமளவில் வெற்றிபெற்றது குறித்தே அவர் இவ்வாறு கூறினார். அவர் மேலும் கூறியதாவது:

காங்கிரசின் கீழ்த்தரமான போக்குத்தான் நகரசபைத் தேர்தலில் தி. மு. கழக ஏகபோக வெற்றிக்கு காரணம். இரண்டாவது காரணந்தான் தி. மு. கழகத்தின் உழைப்பு, கொள்கை, நேர்மை ஆகியவையாகும்.

இந்த அளவுக்கு வெற்றி தி. மு. கவுக்கு கிடைக்கும் என்று நான் நினைக்கவில்லை. காங்கிரஸார் புத்திசாலித்தனமாகவும். பொறுப்பு உடையவர்களாகவும் இருந்தால் அவர்கள் ஐந்து வருட காலத்துக்காவது தேர்தல்களில் நிற்கக் கூடாது. காங்கிரஸ் தன் பத்திரிகைகள்போக்கையும், பிரசார போக்கையும் மாற்றிக்கொள்ளவேண்டும்.

தி. மு கழகத்தின் வெற்றிக்கு மற்றொரு காரணம் அவர்கள் தமிழர்கள் விஷயத்தில் எடுத்துக்கொண்டு இருக்கும் நேர்மையான நடப்பு ஆகும்

மேலும் தி. மு. கழகத்திற்கு வெற்றி கிடைக்கவேண்டுமானால் காங்கிரசார் தங்களைப்பற்றி (தி. மு. கவைப் பற்றி) கீழ்த்தரமான பிரசாரம் செய்வதற்கு பதில் சொல்லக்கூடாது. சந்தர்ப்பம் ஏற்படும்போதுஎல்லாம் தமிழர் நலனை அவர்கள் உரிமைப்படி பாதுகாக்கவேண்டும்,

... காங்கிரஸார் இந்துப்பல்கலைக்கழகம் கேட்டபோது அதற்கு ஏன் மறுப்புத் தெரிவித்தார்கள். தமிழரசார் இந்துப்பல்கலைக் கழகத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்திருக்காவிட்டால் இன்று மழவராயர், இராமநாதன், நாவலர் ஆகியோரது சொத்துக்களை உபயோகித்து பரமேஸ்வராக் கல்லூரியும், இராமநாதன் மகளிர் கல்லூரியும் இந்துப் பல்கலைக்கழகங்களாக இயங்கிக் கொண்டிருக்கும்.

### மாவட்டசபை வராதது நல்லதே

தேசிய அரசாங்கத்திலிருந்து தமிழரசுக் கட்சியினர் வெளியேறியதற்கு மூன்று காரணங்கள் கூறுகின்றார்கள். முதலாவது மாவட்டசபை அது கிடைக்காததே தமிழர்கள் செய்த புண்ணியம். அது கிடைத்திருந்தால் வடக்கு, கிழக்கு உட்பட 22 மாவட்டங்களிலுமே சிங்களம் தான் நிர்வாக மொழியாகியிருக்கும்.

அப்படியானநிலை உருவாகியிருந்தால் டட்லியின் மனதிலிருந்த ஒரே ஆசையும் நிறைவேறியிருக்கும். இந்த நிலை ஏற்படக்கூடாதென்பதற்காகவே இதனைத் தமிழ்க் காங்கிரஸார் ஆகிய நாம் இறுதிவரை எதிர்த்தோம். மாவட்டசபை வராமல் செய்ததினால் நாம் பெருமையடைகின்றோம்.

இரண்டாவது காரணம், தமிழ்ப் பல்கலைக்கழகம் கிடைக்காதது என்கிறார்கள். இதற்கு முழுக் காரணம் தமிழரசாரேதான்.

மூன்றாவது காரணம், தென்னிந்திய தமிழ்ப் படங்களுக்குத் தடை விதிக்கப்பட்டது என்றார்கள்.

### தமிழ்ப்படங்கள் வளர வாய்ப்பு

சிங்கள, தமிழ்ப்படங்கள் போல இலங்கையில் தமிழ்ப் படங்களும் வளர்ச்சியடைய இது ஒரு நல்ல திட்டமாகும். இதனால் எமது பாரம்பரிய கலை, கலாசாரத் தொடர்பு அழிந்துவிடாது.

சாவகச்சேரி முன்னாள் எம். பி. யான திரு. வி. குமாரசாமி பேசுகையில் மகாவலி கங்கையைச் சுலபமாக 5 ஆண்டுகளுக்குள் வடக்கே திருபமுடியுமென்றும், முருகண்டி முதல் காங்கேசன்துறை வரையும், பூநகரி முதல் திருக்கேதீஸ்வரம் வரையுமுள்ள சகல முடிக்குரிய காணிகளையும் காணி இல்லாதவர்களுக்கு வழங்கி வேலையில்லாத் திண்டாட்டத்தை அரசாங்கம் போக்கவேண்டுமென்றார்.

திரு. என். ரி. சிவஞானம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திருவாளர் ...

சுழிபுரம், வியாழன்

பாடசாலையில் கல்வி கற்கும் மாணவ மாணவிகளிடம் சியவச டிக்கட் விற்பதை உடன் தடைசெய்யுமாறு கோரும் தீர்மானம் சுழிபுரம் கிராமசபையின் மாதாந்தக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது. கிராமசபைத் தலைவர் திரு. சு. கந்தசுவாமி கூட்டத்துக்குத் தலைமை வகித்தார். கல்வி அமைச்சர் மற்றும் அதிகாரிகளுக்கு தீர்மானப் பிரதிகள் அனுப்பி வைக்கப்பட்டன.

## மலேரியா பரவுகிறது

வாழைச்சேனை, வியா

நாட்டின் பலபாகத்திலும் சமீபத்தில் மழைபெய்திருந்தும் வாழைச்சேனைப் பகுதியில் கடும் வெப்பம் நிலவுகிறது. இக்கடும் சூட்டைத் தாங்க இயலாது மக்கள் பெரும் அவஸ்தைக்குள்ளாகின்றனர். நுளம்புத்தொல்லையும் இப்பகுதியில் அதிகரித்துள்ளதனால் மலேரியாவும் தீவிரமாகப்பரவிவருகிறதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## மறைந்த அதிபருக்கு அனுதாபம்

உடுவில், வியா

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி அதிபர் திரு. ஜே. வி. தம்பிநாயகம் மரணமானது குறித்து மானிப்பாய் மெமோரியல் பாடசாலை மாணவர்களும் ஆசிரியர்களும் அனுதாபக் கூட்டம் நடத்தினர்.

"காலம் சென்ற திரு. ஜே. வி. தம்பிநாயகம் மானிப்பாய் மெமோரியல் பாடசாலையில் பல ஆண்டுகள் அதிபராக இருந்தவர் மாணவர்களின் வளர்ச்சியிலும், முன்னேற்றத்திலும் கண்ணாக இருந்தவர். சிறந்த ஒரு சமூக சேவகர் இவரது மறைவு மாணவ உலகிற்கு ஒரு பெரிழப்பாகும். சமூகம் ஓர் தொண்டனை இழந்துள்ளது" என்று இப்பாடசாலை ஆசிரியர் திரு. ஞானசிகாமணி அன்னப்பா அனுதாபக் கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

பண்டிதர் திரு. எஸ். கதிரவேலுப்பிள்ளை உட்பட பலரும் திரு. தம்பிநாயகத்தின் மரணத்திற்கு அனுதாபம் தெரிவித்துப் பேசினர்

காலம் சென்றவரின் ஆன்மா சாந்தியடைய வேண்டி இரண்டு நிமிட நேரமௌனம் அனுஷ்டிக்கப்பட்டது.

திருமதி சிறிமா பண்டாரநாயகா மேலும் கூறியதாவது:

அன்று தங்கள் வசதிக்காகக் கலியாணம் செய்தவர்கள் இன்று தங்கள் வசதிக்காகப் பிரிந்து கொண்டார்கள். பிரிந்துகொண்ட பின்னும் ஒப்பந்தத்தை வெளியிட ஏன் தயங்குகிறார்கள்?

இந்நாட்டில் சிங்கள இனம் நிலைத்திருக்க வேண்டுமானால் நாட்டின் ஆதிபத்திய உரிமை பாதுகாக்கப்பட வேண்டுமானால் பிற்போக்குச் சாதிகளை வெளியேற்ற வேண்டும். வகுப்பு ஒற்றுமை நிலவ வேண்டியது அவசியம். பெரும்பான்மை இனத்தின் உரிமைகளை விட்டுக் கொடுக்காமல் சிறுபான்மையினரின் உரிமைகளை வழங்கவேண்டும். இதைத்தான் அதிகமான சிங்களமக்கள் விரும்புகின்றனர்.

## அடுத்த மாதம் போட்டிகள் நடக்கும்

முல்லைத்தீவு, வியா.

முல்லைத்தீவு வட்டாரப் பாடசாலைகளின் வருடாந்த விளையாட்டுப் போட்டியை அடுத்த மாத முற்பகுதியில் நடாத்துவதற்கான ஒழுங்குகளை முல்லைத்தீவு வட்டாரக் கல்வியதிகாரி திரு. செ. கந்தையாவும், வட்டார ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் திரு. இ. வரதராசாவும் மேற்கொண்டுள்ளனர்.

## உதவி மந்திரியை வரவேற்பர்

வல்வெட்டித்துறை, வியா

இம்மாதம் 8-ந் திகதி பருத்தித்துறைக்கு விஜயம் செய்யவிருக்கும் தேசிய சேவ விளையாட்டு உதவி மந்திரி திரு. டி. டி. வெலகெதரவுக்கு பருத்தித்துறை உயர்தர பெண்கள் கல்லூரியில் வடமராட்சி காரியாதிகாரி திரு. எஸ். ஜெயகாந்தன் தலைமையில் விருந்து உபசாரம் ஒன்று நடைபெறவிருக்கிறது.

## இரட்டைக் குழந்தைகள்

சுழிபுரம், வியாழன்

சங்கானைக்கோவில் பற்றிலுள்ள பதிவு காரர் பிரிவில் கடந்த வாரத்தில் மட்டும் ஆறு பெண்கள், இரட்டைக் குழந்தைகளைப் பெற்றுள்ளனர்.

## கி. ச. பாராட்டு

வேலணை, வியாழன்

தீவுப்பகுதிப் பிரசித்த நொத்தாரிஸ் திரு. ம. க. சுப்பிரமணியத்தைப் பாராட்டி, வேலணைக் கிராமசபை ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

சுதந்திரம் பெறுவதற்காக முயலும் போது, யார் சுதந்திரத்தை அனுபவிக்கவேண்டுமோ, அவர்கள் அனைவரும் அழிய நேர்ந்தால், சுதந்திரமுயற்சி கேலிக் கூத்தாகிவிடும். —மகாத்மாகாந்தி


ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna Telephone: 389,

யாழ்ப்பாணம், சௌமிய வருஷ சித்திரை மாதம் 20ந் திகதி (2-5-69)


## தொழிலும் தொழிலாளரும்

இந்நாட்டில் வாழும் தொழிலாளர் வர்க்கத்தினர் உலகத் தொழிலாளர் தினமான மே தினத்தை பல்வேறு வகையில் கொண்டாடினர், கொண்டாடி வருகின்றனர். தொழிலாளர் நிலை இங்கு இன்னும் மேம்படவில்லை. தொழிலாளர் தான் ஒரு நாட்டின் முதுகெலும்பு. அவர்கள் திருப்தியுடன் வாழ்ந்தால் தான் நாடு பல துறைகளிலும் முன்னேற முடியும். தொழிலாளருக்கு உழைப்புக் கேற்ற ஊதியம் கிடைக்கவேண்டும். தொழிலாளர் தமது உரிமையைக் கோரும் அதே சமயம்தமது கடமையையும் பொறுப்பையும் உணர்ந்து செய்ய வேண்டும். தொழிலாளரின் நிலைமையை உணர்ந்து அவர்களின் உழைப்பையும் மதித்து முதலாளியும் நடந்து கொள்ளவேண்டும். முதலாளி தொழிலாளி நல்லுறவில் தான் இரு தரப்பினரின் நலனும் நாட்டின் நலனும் பெருமளவில் தங்கியிருக்கிறது.

தொழிலாளி உரிமையை மட்டும் கோரிக் கொண்டு கடமையை மறந்து விடுவதும் தொழிலாளியின் உழைப்பை உறிஞ்சி முதலாளி சுரண்டி வாழ்வதும் தொழிலில் அமைதியை நிலைநாட்டவும் நாடு முன்னேறவும் உதவமாட்டா. பிரிட்டனில் இப்போது தொழிற்கட்சி அரசாங்கம் ஆட்சிபீடத்திலிருக்கிறது. அங்கு சமீப காலத்தில் வேலை நிறுத்தங்கள் அதிகரித்து வருவதால் நாட்டின் பொருளாதார நிலை சீர்கேடடைந்து. இதனுல் வேலை நிறுத்தங்களைக் கட்டுப்படுத்தும் நோக்கத்துடன் தொழிற் கட்சி அரசாங்கமே ஒரு மசோதாவைக் கொண்டு வர விருக்கிறது. இந்தியாவிலும் கூட வேலை நிறுத்தங்களைக் கட்டுப்படுத்தி தொழில் தகராறுகளுக்கு பேச்சு வார்த்தை மூலம் தீர்வு காண்பதற்கான, நிர்ப்பந்தப் படுத்துவதற்கான சட்டம் கொண்டு வரவும் முயற்சி செய்யப் படுகிறது. வேலை நிறுத்தங்களால் முதலாளிமாரும் அரசாங்கமும் மட்டு மல்லாமல் தொழிலாளரும் பொது மக்களுமே பெரிதும் பாதிக்கப் படுகின்றனர். வேலை நிறுத்தம் இருபக்கமும் கூரான ஓர் ஆயுதம் போன்றது. அதை மிகக் கவனமாக இனி வேறுவழியில்லை என்ற நிலையில்தான் உபயோகப் படுத்த வேண்டும். தொழில் தகராறுகளுக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாண்பதென இருதரப்பினரும் சங்கற்பம் செய்து கொண்டால் தொழில் அமைதியின்மை ஏற்படாது; வேலை நிறுத்தங்களும் தோன்ற மாட்டா.

நமது நாட்டில் தொழிலாளர் நிலை இன்னும் மேம்பாடடையவில்லை. ஆயினும் வேலையில்லாதோர் நிலையையும் சிந்திக்கவேண்டியது அவசியம் தொழிலாளரின் வாழ்க்கை நிலையை சீராக்க வேண்டிய அதேசமயம் வாழ்வையே வெறுக்கும் நிலையிலுள்ள வேலையற்ற அதுவும் படித்து வேலையற்றிருக்கும் வாலிபர்களுக்கு வேலைவாய்ப்பளிக்க அரசாங்கமும் தனியார் துறையினரும் துரித முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியது அவசியம்.

## கடற்றொழில் விருத்தி

ஆட்சிமன்றத்திலே- - - -

நமது நிருபர்
பெரி. சுந்தரலிங்கம்

# வடபகுதி பஸ்சேவை பற்றி ஆட்சிமன்றத்தில் விமர்சனம்

தமிழரசுக்கட்சி உறுப்பினர்களின் குரல் இனி ஆட்சிமன்றத்தில் அடிக்கடி ஒலிக்கும் என்பதை அறிவிக்கும் விதமாகத்தான் சென்ற வாரம் ஆட்சி மன்ற விவாதம் நடந்தது.

அரசாங்கக் கட்சி உறுப்பினர் ஒருவர், உடுவில் எம். பி. தர்மலிங்கத்தை நோக்கி "என்னப்பா, நீங்கள் எல்லோரும் இப்பொழுது பேசுவதிலே அதிகம் உற்சாகம் காட்டுகின்றீர்களே" என்று வாய்திறந்தே கேட்டார் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்.

தனி நபர் பிரேரணை நாளான சென்ற திங்கட்கிழமை தெனியாய எம். பி. திரு. எஸ் பி. ஹேரத் தனது தொகுதியில் உள்ள சில பாதைகளில் இ. போ. ச. பஸ் சேவை ஆரம்பிக்க வேண்டும் என்றும், சில பாதைகளை அரசாங்கம் செப்பனிடவேண்டும் என்று கோரும் பிரேரணைகள்தான் விவாதத்திற்கு வந்தன.

தெனியாய தொகுதியிலுள்ள ஒரு பாதையில் இ. போ. ச. பஸ் சேவையை ஆரம்பிக்கக் கோரும் தீர்மானத்தை வைத்துக் கொண்டு, எதிர்க்கட்சி எம். பி. க்கள் தங்கள், தங்கள் தொகுதிகளில் உள்ள இ. போ. ச. குறைபாடுகளைப் பற்றியும், இ. போ. 'ச. வைப்பயன் படுத்தி தேசிய அரசாங்கம் தனது ஆதரவாளர்களுக்கு உத்தியோகங்கள் வழங்குகின்றதென்ற குற்றச்சாட்டுபற்றியும் பொரிந்து தள்ள ஆரம்பித்துவிட்டனர். சபாநாயகர் திரு. ஷெர்லி கொரியா, தன்னாலான மட்டும் முயற்சி செய்து எம். பி. க்களின் பேச்சுக்களில் அடிக்கடி குறுக்கிட்டு, "பிரேரணையைப் பற்றி மட்டும் பேசுங்கள், பொதுவாக இ, போ. ச. பற்றியோ வேறு தொகுதிகளில உள்ள குறைபாடுகள் பற்றியோ பேசாதீர்கள்' என்று பன்முறை கேட்டும் பலன் கிட்டவில்லை. பேச ஆரம்பிக்கின்ற எம். பிக்கள் ஒவ்வொருவரும் சுற்றி வளைத்து தங்கள், தங்கள் தொகுதி குறைபாடுகளையே முன் வைக்க ஆரம்பித்தனர்.

இதிலே மகிழ்ச்சிகரமான செய்தி என்ன வென்றால், புதியசூழ்நிலையின் விளைவோ என்னவோ பெரும்பாலான தமிழ் பேசும் எம். பிக்களும் இந்த விவாதத்தில் பங்கு கொண்டு தமிழிலேயேபேச ஆரம்பித்ததுதான்.

மட்டக்களப்பு இரண்டாவது உறுப்பினர் லத்தீப் சின்னலெப்பை எங்களை விட்டுப்பிரிந்த நண்பாகள் (எங்களுடனிருந்த போது எவ்வளவோ நன்மைகளைப் பெற்றார்கள் என்பது உண்மையேஎங்களை விட்டு அவர்கள் பிரிந்து விட்டாலும், அவர்களை நாங்கள் புறக்கணித்து விடமாட்டோம். என்று எதிர்க்கட்சி ஆசனங்களில் இப்போது அமர்ந்திருந்த டாக்டா நாகநாதன் உடுவில் தர்மலிங்கம் பண்டிதர் கா பொ ரத்தினம் ஆகியோரை நோக்கிப் புன்னகையுடன் கூறிவிட்டு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆட்சிக் காலத்தில் கிழக்குமாகாணம் வெகுவாகப்புறக்கணிப்பட்டு விட்டதாகக் குற்றம்சாட்டினார். இவருக்குப் பதிலளிக்க எழுந்த மூதூர் முதலாவது உறுப்பினர் திரு. ஏ எல். ஏ. மஜீத், ஏகாதிபத்தியவாதிகளின் கரங்களில், முதலாளித்துவப் பிரதிநிதிகள் கைகளில் சிக்கியிருந்த பஸ்போக்குவரத்தை மக்கள் பிரதமர் காலஞ்சென்ற எஸ். டபிள்யு. ஆர் டி. பண்டாரநாயக்காதான் தேசியமயமாக்கினார்' என்று சொல்லி, "ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஆட்சிக் காலத்தில் சாதி, மத, பேத மற்ற முறையில் நாடெங்கும் உள்ளோடுக்காகசேவை நடந்ததாக" குறிப்பிட்டார்.

சாவகச்சேரி உறுப்பினர் திரு. வி. என். நவரத்தினம் அடுத்து பேச எழுந்தபோது புதிய இடத்தில் அவர் இருப்பதைச் சுட்டிக்காட்டியசபாநாயகர், தங்கள் இடத்திலிருந்துதான் பேசுகின்றீர்களா என்பதை முதலில் கவனித்துக்கொள்ளுங்கள்" என்று நினைவுபடுத்தினார்.

### யாழ்ப்பாணம் பஸ்சேவை

யாழ்ப்பாணத்திலிருந்து தென்பகுதியைநோக்கிஓடும் பஸ்கள் நேரம்தவறி ஓடுவதால் எண்ணற்ற மாணவ மாணவிகள், உத்தியோகத்தர்கள் ஆகியோர் பெரும் சிரமத்திற்குள்ளாவதைச் சுட்டிகாட்டிய திரு. வி. என். நவரத்தினம் சென்ற கிழமையில் ஒருநாட்காலை ஒன்பதரை மணிக்கு இவர் சாவகச்சேரியிலிருந்து யாழ்பபாணம் சென்றபோதுஒவ்வொரு தரிப்பிடத்திலும் நூற்றுக்கணக்கானோர் பஸ்ஸுக்குக் கடும் வெயிலில் காத்திருப்பதை நேரில் கண்டதாகக் கூறினார்.

இந்தப்பகுதியில் ஓடும் 60 பஸ்களில் 20 பஸ்கள் நிரந்தரமாகப் பழுதுபட்ட நிலையில இருப்பதாகவும், 8பஸ்கள் தற்காலிகமாகப் பழுதுபட்டு இருப்பதாகவும், அதனுலதான் இப்படி வழிநெடுகிலும் மக்கள் பஸ்ஸுச்காகக் காத்திருக்கவேண்டியிருக்கிறது என்றும், இ. போ. ச' அதிகாரிகள் விளக்கம்கொடுத்ததாகவும் திரு. வி.என் நவரத்தினம்சொன்னார்.

### பருத்தித்துறை

பருத்தித்துறை எம். பி. திரு. துரைரத்தினமும் எழுந்து 751,752 ரூட்களில ஓடும்பஸ்கள் எலலாம்அடிக்கடி பழுதடைகின்றன என்றும், உதிரிப்பாகங்கள் போதியஅளவு கையிருப்பில இலலாததாலதான் இப்படி நேருகின்றதென்றும் கூறிவிட்டு, பருத்தித்துறை-மருதங்கேணி பஸ் சேவையை அபிவிருத்திசெய்ய - வான் அளவிலான சிறிய பஸ்களையாவது விட இ. போ. ச. முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

பருத்தித்துறை டிப்போவுக்குத் தேவையான உதிரிப்பாகங்களையெலலாம் அடுத்த மாதம் 15-ந் திகதிக்கு முன் அனுப்ப இ. போ, ச. ஒத்துக்கொண்டிருப்பதாகத் தெரிவித்த திரு. துரைரத்தினம் அதற்கப்புறமாவது 751, 752 சேவைகள் செவ்வனே செயலபடுமென்று எதிர்பார்ப்பதாகக்கூறினார்.

### வவுனியா

வவுனியா எம்பியும் தமிழ் காங்கிரஸ் உறுப்பினருமான திரு.ரீ. சிவசிதம்பரத்துக்கு, இத்தனைநாளும் தங்கள் பக்கத்திலிருந்த தமிழரசுக் கட்சி உறுப்பினர்கள் இன்று எதிர்க்கட்சி ஆசனங்களில் உட்கார்ந்துகொண்டு, எதிர் கட்சிக்காரர்களுடன் சேர்ந்துகொண்டு. அரசாங்கத்தையும் இ.போ.ச. வையும் குறைகூறுவது அவ்வளவாகப் பிடிக்கவில்லை.

எனவே, 'அரசாங்கத்தில் இருந்தாலென்ன இல்லாவிட்டாலென்ன, ஒவ்வொரு உறுப்பினரும் விரும்புமாப்போல, தனித்தொகுதிக்குத தேவையானபடி, உலகிலேயே இரண்டாவதுபெரிய பஸ்சேவையான இ.போ.ச. பஸ்சேவையை நடத்துவது சாத்தியமானதல்ல' என்று அறிவுறுத்திவிட்டு, நாட்டின் பொருளாதார தேவைகளுக்கும் வசதிக்கும் ஏற்பவே பஸ்சேவை நடைபெறும் - நடைபெறவேண்டும் என்று சொன்னார்.

தேசீய அரசாங்கம் ஆட்சிக்கு வந்தவுடன் இ. போ. ச. சேவையில் எவ்வளவோ முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறதென்று குறிப்பிட்ட போது, மூதூர் எம்.பி, திரு. மஜீத் குறுக்கிட்டு, 'தமிழரசுக்கட்சியினர் வெளியேறி விட்டபின்னரும் இந்த அர

## 'ஈழநாடு' முதலெழுத்துப் போட்டி-(2)

எங்கள் முதலாவது போட்டிக்கு வாசகநேயர்களிடமிருந்து இவ்வளவு அமோகமான வரவேற்பு கிடைக்கும் என்று நாம் சற்றும் எதிர்பார்க்கவில்லை. அவர்களிடமிருந்து கிடைத்த ஆயிரக்கணக்கான விடைகளிலிருந்து இப்போட்டி அவர்கள் மனதில் ஆழமாகப் பதிந்துவிட்டதென்பது நிச்சயம்.

இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தின் முதல் எழுத்துக்களாகிய இ. ஒ. கூ. வுக்கு இன்னொரு பெயர் வைக்[illegible]று கேட்டிருந்தோம்.

## ஐயாறன் எழுதுவது

பொழுது விடிந்தால் ஏன் விடிகிறதென்று உள்ளது. இரவு வரும்போது ஏன் வருகிறதென்று இருக்கிறது. காரணம், பகலிலும் இரவிலும் ஒரே புழுக்கம். 'உங்கள் வீட்டில் எப்படியோ?' என்று சில அன்பர்களைக் கேட்டேன். எங்கும் இப்படித்தானும். அது ஒருவித ஆறுதல்தானே!

மின் விசிறியை முடுக்கிவிட்டால், அனல் காற்றுத்தான் வீசுகிறது. என்ன செய்வது? குளிர்சாதனம் இருப்பவர்களுக்கும், நுவரேலியா போன்ற மலைப்பகுதிக்கு செல்லமுடிபவர்களுக்கும் தேவலாம். ஏனையோருக்கெல்லாம் இது முடியக் கூடியதா?

சில வருடங்களுக்கு முன் நாகபுரிக்கு சித்திரை மாதம் சென்றிருந்தேன். அங்கு எவ்வளவு டிகிரி உஷ்ணம் தெரியுமா? வெளியே 116 டிகிரி என்று விமானத்தில் இருக்கையில் அறிவித்தார்கள். விமானத்தை விட்டு இறங்கினால் அந்த உஷ்ணத்தை எப்படித் தாங்குவதென்று ஒரே பீதியாக இருந்தது. பலர் இந்த வெயில் தாங்காமல் இறந்தும்விட்டனர்.

விமானத்திலிருந்து இறங்கி விமானக் காரியாலயத்துக்குச் சென்றால், அங்கு பல மின் விசிறிகளும் பலமாகச் சுற்றிக்கொண்டிருந்தன. ஒரு விசிறியின் கீழ் நின்றதும் அந்த உஷ்ணக் காற்றைத் தாங்கமுடியாமல், முகம் உள்ளிட்டு உடம்பெல்லாம் போர்த்துக்கொண்டு பின்னர் டாக்ஸியில் வீடு சேர்ந்தேன்.

அதையெல்லாம் நினைத்துக்கொண்டதும், யாழ்ப்பாணத்திலே அவ்வளவு புழுக்கமும் வெயிலுமில்லை என்று ஆறுதலாக இருந்தது. நம்மைவிட அதிக சங்கடப் படுகிறவர்களைப் பார்த்தால் அல்லது நினைத்தால் நமது கஷ்டம் பரவாயில்லை என்று நமக்கு ஆறுதல் ஏற்படுகின்றது. இன்றேல் ஆறுதல் கொள்ள வேறென்ன வழி?

0 0 0

சென்னை கார்ப்பரேஷன் சபையில் தி. மு. க, காங்கிரஸ் நகர பிதாக்களுக்குள் திடீரென வாய்ச்சண்டை கைச்சண்டையாக மாறிச் சிலர் காயப்பட்டு ஆஸ்பத்திரியில் சிகிச்சைபெற்றதாகக் கேட்டுத்திடுக்கிட்டேன்.

யாழ்ப்பாண மாநகர சபைக் கூட்டங்களில் (இச்சபையிலல்ல முந்திய சபைகளில்) மேயரை 'யூ ஸ்கவுண்டிரல் போக்கிரி) என்றும் அழைப்பதுண்டு என்று கேட்டுத் திடுக்குற்றேன். 'வர்ஷிப்புல் மேயர்' (வணக்கத்துக்குரிய மேயர்) என்று அழைக்கவேண்டியவரை, இப்படி அவமதித்தது உண்மையாயின் அது எவ்வளவு மோசமான நிலையென்று கூறினேன். ஆனுல் சென்னையிலே நடந்துள்ள இந்தக் கைகலப்புச் சம்பவத்தைக் கேட்டதும், யாழ்ப்பாண மாநகரசபை உள்ளிட்டு ஈழத்திலுள்ள ஸ்தலஸ்தாபனங்களைப் பற்றி என் மதிப்புப் பெரிதும் உயர்ந்தது. இங்கு வாயளவிலேயே தகராறு இருந்துள்ளதேயன்றி, அடிதடியில் இறங்கிவிட்டதாக எனக்குத் தெரிந்தவரை இல்லை. இங்கு அப்படி ஏதும் நடந்துள்ளதா?

0 0 0

இது கோடை காலம். சென்னையிலே குடிநீரும் இல்லையாம். ஈழத்திலுள்ள நாம் எவ்வளவு அதிர்ஷ்டசாலிகள்! நகரசபைத் தேர்தல்களில் இப்போது காங்கிரஸ் பெருந் தோல்வியுமடைந்துள்ளது. தி. மு. க.வுக்குப் பெரும் வெற்றி. உணர்ச்சி வேகம் அதிகரித்து அடிதடிகளும் நடந்துள்ளதில் வியப்பில்லைத்தானே!

அண்ணா மறைந்தபின் தி. மு. க. பிசுபிசுத்துவிடுமென்று சிலர் கருதினர். படி அரிசி (ரூபாக்கு சுமார் இரண்டு கொத்து) அளிப்பதாகத் தேர்தல்காலத்தில் அளித்த வாக்குறுதியை இரண்டு வருட ஆட்சியிலே சரிவர நிறைவேற்றாததால் தி. மு. க.வுக்குப் பொதுமக்களின் ஆதரவு குறைந்திருக்குமென்றும் அதிக நகரசபைகளின் தேர்தலில் இது தெரியவருமென்றும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டின் பொருளாதார நிலை சீர்கேடடைந்து, இதனால் வேலை நிறுத்தங்களைக் கட் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியது அவசியம்.

## கடற்றொழில் விருத்தி

மீன்களைத் தகரங்களில் அடைப்பதற்கான தொழிற்சாலையொன்றை யாழ்ப்பாணத்தில் நிறுவுவது பற்றிய வாய்ப்புக்களை ஆராய்வதற்கு பிரஞ்சு தொழில்நுட்ப நிபுணர்குழுவொன்று இன்று இங்கு வரக்கூடுமென எதிர்பார்க்கப்படுகிறது. அவர்களது வருகை நல்ல பயன்தருமென்று நம்புவோம்.

இலங்கையிலேயே யாழ்ப்பாண மாவட்டத்தில்தான் பெருமளவில் மீன் பிடிக்கப்படுகிறது. இங்குள்ள மீனவருக்கு நவீன வசதிகள் போதிய அளவு இல்லை; அவர்களுக்குத் தகுந்த பாதுகாப்பு வசதிகளும்இல்லை. ஆயினும் இங்கு பிடிக்கப்படும் மீனுக்கு மதிப்பு அதிகம். இங்கிருந்து கொழும்பு முதலிய இடங்களுக்குத் தனியார் சிலர் மீன்களை லொறிகளில்ஏற்றுமதி செய்கின்றனர். யாழ்ப்பாண மாவட்டம் மட்டுமல்ல இலங்கை கடலால் சூழப்பட்ட தீவாக இருப்பினும் இங்கு கடற்றொழில் விருத்தியில் போதிய அக்கறைசெலுத்தப்படவில்லை. மீன்பிடிக் கூட்டுத்தாபனம் பத்து வருடத் திட்டம் தீட்டியதுதானேயன்றி அத்திட்டம் இதுவரை வெற்றியளித்ததாகத் தெரியவில்லை. கடல் சூழ்ந்திருந்தாலும்இப்போதும்வெளி நாடுகளிலிருந்து 'டின் மீன்' இறக்குமதி செய்ய வேண்டியுள்ளது. யாழ்ப்பாணக்குடா நாட்டில் சாதாரண மக்கள் அதிக விலை கொடுத்தே மீன் வாங்கவேண்டியுள்ளது.

விவசாயத்துறையில் தீவிர கவனம் செலுத்தி உணவு உற்பத்தியில் ஓரளவு வெற்றியீட்டியுள்ள அரசாங்கம் கடற்றொழிலிலும் அதிக கவனம் செலுத்தினால் நாட்டின் மீன் தேவையில் சுய தேவை பூர்த்தியடைவதுடன் வெளிநாட்டுக்கு மீன் ஏற்றுமதி செய்வதன்மூலம் வருமானமும் கிடைக்கும்.

மீன்களைத் தகரங்களில் அடைக்கும் தொழிற்சாலையொன்று பேசாலையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளபோதிலும் யாழ். மாவட்டத்தில் மீன்களைத் தகரங்களில் அடைக்கும் தொழிற்சாலையொன்று நிறுவப்பட்டால் அதிக பயன் கிடைக்குமென்று எதிர்பார்க்கலாம். யாழ். குடாநாட்டில் மீன்களைத் தகரங்களில் அடைக்கும் தொழிற்சாலை மட்டுமல்ல பனம்பொருள் உற்பத்தி நிலையங்கள் போன்ற மற்றும் பல தொழில் நிறுவனங்களை ஆரம்பிப்பதன் மூலம் நாட்டின் வருமானத்தை அதிகரிக்கவும் வேலையில்லாத்திண்டாட்டத்தை நீக்கவும் வழி காண முடியும்.

**ஆசிரியருக்கு கடிதம்**

## திருமுறைகளுக்கும் சுரஅமைவு

24-4-69 'ஈழநாடு' வாரமலரில் ''நமது நோக்கு'' பகுதியை படித்து மிக்க மகிழ்ச்சியடைந்தேன்.

இந்தியாவிலே சென்னையில் நடந்த இசைவிழாவிலே நாதஸ்வர வித்துவான் சின்னமௌலானு ''சிறையாரும் மடக்கிளியே'' என்ற தேவாரத்தைச் சிறப்பாக வாசித்து மக்களை மனம் நெகிழச் செய்திருந்தார் என அதில் காட்டப்பட்டிருந்தது மகிழ்ச்சி அது ஒருபுறம் இருக்க யாழ்ப்பாணத்திலே உள்ள நாதஸ்வர வித்துவான்கள் தேவார திருமுறைகளை உரிய இடத்தில் வாசிக்காமல் விடுகிறார்கள் எனக் குறை கூறப்பட்டுள்ளது. இது சரியல்ல காரணம் தமிழர்களால், சைவர்களால் பண்டித வித்துவான்களால், பாவலர்களால், இசைவாணர்களால், நடாத்தப்படும் இசைவிழாக்களில் முதலாவதாகத் தேவார திருமுறைக்கு இடம் கொடுத்து மக்களை மகிழச் செய்கின்றார்களா?

முதலாவதாக யாழ்ப்பாணத்திலே உள்ள சங்கீத வித்வான்கள் தமிழ் இசை விழாக்களிலே வாய்ப்பாட்டுப் பாடும்போது திருமுறைகளையும் சேர்த்துக் கொண்டால் என்ன? தேவாரம் தானே என்று லேசாக தள்ளிவிடுகின்றார்கள்.

(7-ம் கலம் பார்க்க)

இப்பத்திரிகை. ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1969-ம் ஆண்டு மே மாதம் 2-ம் திகதி ... [illegible]

பலன் கிட்டவில்லை, பேச ஆரம்பிக்கின்ற எம். பிக்கள் ஒவ்வொருவரும் சுற்றி

புதிய இடத்தில் அவர் இருப்பதைச் சுட்டிக்காட்டியசபாநாயகர், 'நீங்கள் சரியான

# பூரி சுவாமிகள் மீது வழக்கு தாக்கல்

பட்னு, மே 1

பூரிசங்கராச்சாரியார் மீது பீகார் மாநில அரசாங்கம் வழக்குத்தாக்கல் செய்துள்ளது அண்மையில்நடைபெற்ற இந்து மகாசபைக் கூட்டமொன்றில் பூரிசங்கராச்சாரியர் தீண்டாமை அனுஷ்டிக்கப் படுவதை ஆதரித்துப் பேசியதையொட்டியே இந்தவழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பூரி சாமியாரின் பேச்சு பற்றி பீகார் நீதிபதியொருவர் ஏற்கனவே விசாரணைகள் நடத்திவந்தார். இவர் தமது அறிக்கையை பீகார் அரசுக்கு சமர்ப்பித்திருப்பதாகத் தெரிகின்றது இந்த அறிக்கையின் மீதே இப்பொழுதுவழக்குத்தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றது.

இம்மாதிரி வழக்குத்தாக்கல் செய்யப்படுவது இதுவே முதல் தடவையாகும்.

## சிட்னி நகரம் இருளில்

சிட்னி, ஏப். 1

அவுஸ்திரேலிய தலைநகரான சிட்னியில் மின்சார ஊழியர்கள் வேலைநிறுத்தத்தில் இறங்கியுள்ளதால் இன்று சிட்னி நகரம் இருளில் மூழ்கியது. இதன் காரணமாக 20 லட்சம் மக்கள் இன்று பாதிக்கப்பட்டனர்.

## இன்று வெளியீடு

சுழிபுரம், வெள்ளி

இன்று வழக்கம்பரை அம்மன் கோவில் மண்டபத்தில் அமரர் அண்ணு என்ற நூல் வெளியீட்டுவிழா நடைபெறவிருக்கிறது

Today Only

SHAKESPEARE'S

TWELFTH NIGHT

Presented by

The English Dramatic Society

OF THE

Govt. Training College, MAHARAGAMA

Produced by

Augustine Tambimuttu

AT THE

TOWN HALL, JAFFNA

Two Shows Daily at 3-00 & 6-30 p. m.

RATES:

Rs. 5-00—3-00—2-00

and

Re. 1-00

Matinee Shows— Chairs Re. 1/- Benches -/50 cts.

Proceeds in aid of

Educational and Religious Institutions

மனதில் ஆழமாகப் பதிந்துவிட்டதென்பது நிச்சயம்.

இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தின் முதல் எழுத்துக்களாகிய இ. ஒ. கூ. வுக்கு இன்னொரு பெயர் வைக்குமாறு கேட்டிருந்தோம். இலங்கை வானொலியில் இழவுசெய்திகள் அடிக்கடி அறிவிக்கப்படுவதனாலோ என்னவோ நேயர்கள் பலர் 'ஒப்பாரி' என்ற வார்த்தையை உபயோகித்திருக்கிறார்கள். கிடைத்த பல பெயர்களிலிருந்து போட்டிக்குழு பின்வரும் இரண்டையும் தெரிவுசெய்தது.

### முதலாவது பரிசு பெறும் விடை

### இலங்கை ஒப்பாரி கூட்டணி

இதை எழுதியவர்: கே. இராதாகிருஷ்ணன், 82/6, இராமநாதன் வீதி, நாயன்மார்கட்டு, யாழ்ப்பாணம்.

### இரண்டாவது பரிசுபெறும் விடை

### இசை ஒழிப்பு கூடம்

இதை எழுதியவர்: கா. சிவபாலன், 40, கல்பொத்தை வீதி கொழும்பு.

'இரைச்சல், ஒப்பாரிக் கூக்குரல்,' 'இரவில் ஒலிபரப்பு கூடாது', 'இலங்கை ஒலிமழுக்கு கூட்டுத்தாபனம்', 'இதுவும் ஒரு கூத்து' என்று புகழத்தக்க வேறு பல விடைகளும் வந்திருந்தன.

### இன்றைய போட்டி

இரண்டாவது முதல் எழுத்துப் போட்டியில் நீங்கள் செய்யவேண்டியது இது கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத்தின் கூ. மொ. வி' என்ற முதல் எழுத்துக்களுக்கு நகைச்சுவையுள்ள கிண்டலான ஒரு புதிய பெயரைக் கண்டுபிடித்து எழுதுங்கள்.

### நிபந்தனைகள்

விடையைக் கீழ்க் காணப்படும் கூப்பனில் நிரப்பி, உங்கள் பெயரையும், விலாசத்தையும் தெளிவாக அதில் எழுதி அனுப்பவேண்டும். அனுப்பும் விலாசம்: **முதலெழுத்துப் போட்டி (2), 'ஈழநாடு', த. பெ. இலக்கம்: 49, யாழ்ப்பாணம்.** விடைகளை 'ஈழநாடு' காரியாலயத்தில் நேரடியாகவும் சமர்ப்பிக்கலாம். ஒருவர் எத்தனை விடைகளையாவது எழுதி அனுப்பலாம். ஆனால் ஒவ்வொரு விடையும் கூப்பனில் எழுதப்படவேண்டும். 'ஈழநாடு' ஊழியர்களும், அவர்களுடைய குடும்பத்தினரும் இப்போட்டியில் கலந்துகொள்ளமுடியாது. எல்லா விஷயங்களிலும் போட்டிக் குழுவின் தீர்ப்பே முடிவானது விடைகள் 4-5-69க்கு முன் எமக்கு வந்து சேரவேண்டும். மிகச் சிறந்த விடைக்குப் பரிசுப் பணமாக ரூபா 10ம், இரண்டாவதுக்கு ரூபா ஐந்தும் வழங்கப்படும். வெற்றி பெறுபவர்களின் பெயரும், விலாசமும் முதலெழுத்துப் போட்டி (3) 7-5-69இல் வெளியாகும்போது தெரிவிக்கப்படும்.

'ஈழநாடு'

முதலெழுத்துப் போட்டி-(2)

விடை : ..............................

பெயர் : ..............................

விலாசம் : ..............................

..............................

கிறதென்று குறிப்பிட்ட போது, மூதூர் எம்.பி, திரு. மஜீத் குறுக்கிட்டு, 'தமிழரசுக்கட்சியினர் வெளியேறிவிட்டபின்னரும் இந்த அரசாங்கத்தை தேசிய அரசாங்கம் என்று அழைக்க முடியுமா?' என்று ஒரு கேள்வியைத் தூக்கிப்போட்டார்

திரு. சிவசிதம்பரமோ இந்தக்கேள்விக்கு அசந்துவிடாமல், 'தேசியம்என்றால் என்ன என்ற விளக்கம்பெற இதுவல்ல சரியான சந்தர்ப்பம்;வேண்டுமானால் தனியே சந்தித்து விளக்கம் தருகிறேன்' என்று சொல்லிவிட்டு தனது பேச்சைத் தொடர்ந்தார்.

இந்த நிலையில் மட்டக்களப்பு எம்.பி. திரு. லத்தீப் சின்னலெப்பை குறுக்கிட்டு, 'கோரம்' இல்லை என்று கூறவே 'கோரம்' மணிஅடிக்கப்பட்டது. போதியஉறுப்பினர்கள் வராது போகவே, சபைஒத்திவைக்கப்பட்டது.

(2ம் கலத் தொடர்ச்சி)

நேற்றுப் பிறந்தவர் இயற்றுகின்ற பாடலை இன்று பிறந்தவர் இசையமைத்துப் பாடுகின்ற காலமாக இருக்கின்றது. பக்தி ஊற்றெடுத்துப் பாலறாவாயர் முதற்கொண்டு இன்னோரன்ன எத்தனையோ நாயன்மார்கள் பாடிய பாடல்களைப் பற்றியும் அதன் தெய்வீக மகிமையைப் பற்றியும் இசைவிழா வெடுக்கும் இசைவாளர்கள் அறியவில்லைபோலும். நாதஸ்வரத்தில வாசிப்பது ஒருபுறம் இருக்க வாய்ப்பாட்டுப் பாடுகின்ற வித்வான்கள் அதைமுதலிலகடைப்பிடிக்க வேண்டும்.

இந்தியாவைச் சேர்ந்த அப்பாசாமி ஓதுவாருடைய, 'தேவாரப் பண் சுர அமைப்பு' என்ற புத்தகம் இன்றும் பெறக்கூடியதாக இருக்கின்றது.

மலையின்மேல் விளக்காக இன்றும் திகழ்ந்துகொண்டிருக்கிறார்கள் எத்தனையோ வித்துவான்கள். தேவாரத் திருமுறைஓதுவார்கள் அவர்களுக்கெல்லாம் தமிழ் இசை விழாக்களிலே இடம் கொடுத்து, திருமுறையைப் பண்முறைப்பட ஓதச்செய்துபயனடையலாம். இலங்கை வானொலியாரும் இதைச் சற்றுச் சிந்திப்பார்களாக.

இசைவாணர்கள் பாடும்போது தேவார திருவாசகங்களுக்கும் முதலிடம்கொடுத்துப்பாடிப் பயனடைந்து எல்லோரையும் பயன்பெறச் செய்வார்களாக

-பண் இசை ரசிகன்.

தி. மு. க.வுக்குப் பொதுமக்களின் ஆதரவு குறைந்திருக்குமென்றும் அதிக நகரசபைகளின் தேர்தலில் இது தெரியவருமென்றும் காங்கிரஸ் கட்சியினர் எதிர்பார்த்தனர்.

ஆனால் தமிழகத்தில் நடந்துள்ள தேர்தல்களில் தி. மு. க.வுக்கு எதிர்பார்த்ததைவிட அதிக வெற்றியே கிடைத்துள்ளது. பல புதிய நகரங்களை அக்கட்சியினர் பிடித்துள்ளனர். காங்கிரஸ் பல கோட்டைகளை இழந்துள்ளது. இதைப் பார்க்கையில் தி. மு. க.வின் செல்வாக்கு தமிழகத்தில் குறைவதற்குப் பதில் அதிகரித்துள்ளதாகவே தெரிகிறது.

தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் சுப்பிரமணியம் இந்த வெற்றிக்காகத் தி. மு. க. வைப் பாராட்டியுள்ளது குறிப்பிடத்தக்கது. இதைக் கண்டதும் நமது ஈழத்தில் உள்ள ஆர். ஜி.க்கள் இலங்கைக்கு ஆபத்து அதிகரித்துவிட்டதாகக் கூச்சல்போட்டு தமிழ்த் துவேஷத்தைக் கிளப்பப்போகிறார்களா?

0 0 0

வாழ்த்த வாயும் நினைக்க
மடநெஞ்சும்,
தாழ்த்தச் சென்னியும்
தந்த தலைவனைச்,
சூழ்த்த மாமலர் தூவித்
துதியாதே,
வீழ்த்த வா வினையேன்
நெடுங்காலமே,
— அப்பர் அடிகள்.

## மரண அறிவித்தல்

இளைப்பாறிய அரசாங்க வைத்தியர் **டாக்டர் எஸ். வைத்திலிங்கம்** அவர்கள் காலமாகிவிட்டார். இவர் தையல்நாயகியின் கணவரும், சிதம்பரநாதன் (சமூகசேவை உத்தியோகத்தர்), சிற்சபேசன் (நில அளவைக் கந்தோர்), டாக்டர் சிறீகாந்தா (அரசாங்க வைத்தியசாலை, மாத்தறை), சர்வேஸ்வரன் (சீனிக் கூட்டுத்தாபனம், கந்தளாய்), திருமதி விஜயலட்சுமி, செல்வி பூம்புகளேஸ்வரி ஆகியோரின் தந்தையும் டாக்டர் கனகரத்தினம் (அரசினர் வைத்தியசாலை, இரத்தினபுரி), சர்வேஸ்வரி, தர்மராணி ஆகியோரின் மாமனாரும், திருநாவுக்கரசு (அப்புக்காத்து) அவர்களின் மைத்துனருமாவார். ஈமக்கிரியைகள் இன்று 2-5-69 காலை 10 மணியளவில் வட்டுக்கோட்டையில் நடைபெறும். 1011

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org